
344

# ஜகன்மோகினி
## JAGANMOHINI

1—4—59

25 நயா பைசா



OFFICE OF THE REGISTRAR
27 APR 1959
MADRAS



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

ஏப்ரல் 1959. மலர் 36, இதழ் 4. விளம்பி ஹூ பங்குனி மீ

## விஷய அட்டவணை

தேசசரித்திரம் உணர்த்தும் பாடம் பொய்யாகாதே!
—வி. கே. பார்த்தசாரதி 1

ஸம்சார சக்கரம்
—ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் 5

வ்ருதாதிகளின் மகிமை
—ஏ. சரோஜாபாய் 9

அன்பு அருவி (தொடர் கதை)
—விஜயலக்ஷ்மி வரதராஜன் 13

கற்பனை விமர்சகர்
—உண்மை விளம்பி 22

லக்னே பொருட் காட்சி 24

குளிர்ந்த நெஞ்சம் (தொடர் கதை)
—வை. மு. கோ. [33—40]

## புத்தாண்டு வாழ்த்துக்கள்!

விளம்பியும் மறைந்து விகாரி விரைந்துவரும் இவ்வருஷம் நாட்டையும், வீட்டையும் நலனுடன் பண்பையும், ஒற்றுமையும், சுபீக்ஷத்தையும் தந்து, சகல ஜன சுகத்தையும் அளித்து சாந்தியைப் பெருக்கி, புத்தாண்டு புதுமணத்துடன் வீச எல்லாம் வல்ல கீதாசாரியன் திருவடியை வேண்டி தொழுகிறோம்.

நிற்க; பல அசௌகர்யங்களால் கட்டுரைகள் குறித்த நேரத்தில் கிடைக்காததால் இந்த இதழில் போட இயலவில்லை. அடுத்த இதழில் ப்ரசுரிக்கிறோம்.




பல அழகிய கலர் படங்களுடன்

☆ விலை ரூ. 4. ★

# தேச சரித்திரம் உணர்த்தும் பாடம் பொய்யாகாதே!

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.

## நடைமுறையில் நடப்பதென்ன?

நடப்பதுவும், முக்கியமாய்த் தேச சரிதையில், திடீரெனவோ, காரணமின்றியோ நிகழ்வதல்ல: கர்மகாரணமாய் மானிடர் வாழ்க்கை போவதுபோலவே, ஆட்சியாளரது கர்ம காரணமாய்த்தான் தேச வாழ்க்கையும் போவதாகும். சுதந்திர இந்திய சரித்திரத்தில், இந்தப் பன்னிரண்டு வருடமாக நடந்ததைக்கொண்டும், இன்று நடப்பதைக்கொண்டும் இனி நடக்கயிருப்பதை நிஷ்பக்ஷபாதமாக ஊகித்துணர்ந்தும், நமது அரசியல், பொருளாதார, சமூக முறைகளைத் திருத்திக்கொள்ள வேண்டிய தருணமும், அவசியமும், நிர்ப்பந்தமும் இன்று ஏற்பட்டிருப்பதை அறிவுடை மாந்தர் எவரும் இல்லையென்னார்.

15-8-1947-ல் நம் தேசத்தில் அன்னியராட்சி அகன்று, இந்திய சுதந்திரம் பிறந்தது. 26-1-1950-ல் குடியரசு அரசியல் திட்டம் ஸ்தாபிதமாகி, அதன்படிக்கு இதுவரை இரு பொதுத் தேர்தல்கள் நடந்தேறி, மக்களாட்சியும், வயதுவந்தோர் வாக்குரிமையும் பெற்று, நமது நாட்டை ஆள்பவரை நாம் தேர்ந்தெடுத்து நம்மை நாமே ஆள்வதாகச் சொல்லப்படுகிறோம்.

காந்திமகான் இந்திய சுதந்திரம் பெற்ற சாதனங்கள், தியாக உணர்ச்சியும், தன்னலமற்ற தேச சேவையும், நிரந்தரத் தெய்வீக பக்தியும், மக்களிடை அன்புமே. ஆனால், அவர் மறைந்து, அவர் கொடுத்துப்போன சுதந்திர இந்தியாவில், அவரது காங்கிரஸ் கட்சி, ஆட்சியேற்று ஆரம்பித்ததுமே என்ன செய்தது?— முதன்முதலாக, அரசாங்கத்தை மதப் பற்றற்றதாக்கியது. இதன் விளைவு, தெய்வபக்தி யகன்றதுவும், மானிடரன்பு மறைந்ததுவுந்தான்! எங்கும் எதற்கும் கட்சிகூடிச் சுயநலப் போராட்டமிடுவதே மலிந்து வருகிறது! - இரண்டாவதாக, ஆளுங் கட்சி, இதரர்களைத் தமது எதிரிகளெனப் பாவித்து, அடக்கு முறைகளைப் பிரயோகித்து, தமது சுய ஆளுகை உரிமையை ஸ்திரப்படுத்திக்கொள்ள, கொள்கைக்கும் நடத்தைக்கும் முரண்பாடாக நடப்பதுதான் :— எல்லாம் ஆசைகாட்டும் பேச்சாய்ப் போகிறதேயொழிய, நடைமுறையில் நலனேதுங் காணோம். நம் நாடு கட்சிகளது போர் அரங்கமாகி வருகிறது. மூன்றாவதாக, ஒற்றுமையும், கட்டுப்பாடும், வேற்றுமையிலும், ஒழுங்கீனத்திலுந்தான் இன்று மிளிர்கிறது. மாணவர்களிடை, தொழிலாளர்களிடை, துரைத்தன உத்யோகஸ்தரிடை, மற்றும் எத்துறை திரும்பினும், 'நான் கேட்பதைக் கொடாவிட்டால்—என் வேலை நிறுத்தம் காண்'—, என்பதுவே எல்லையில்லாக் கூச்சலாகி நடைமுறையிலும் நிறைவேறி வருகிறது! - இதுதானா குடியரசு? தேசியத் தலைவர்களும் இதற்கே சமூகத்தாரைப் பயில்வித்துத் தூண்டிவிட்டும் தமது சுயநல பல சித்திபெற முனைந்துளர்.

1-4-59

**பதவி மோகத்தின் விபரீத விளைவுகள்:**

சத்யமும் அஹிம்ஸையும் தோய்ந்த காந்திக் கொள்கையைக் கொண்டு போஷிக்கப்பட வேண்டிய இந்திய சுதந்திர ஆட்சி முறை, இன்று கட்சிப் போராட்ட மதிப்பு நிலையில் நிலைத்து, முறை தவறிப்போகுமெனப் பத்தாண்டு முன்னர் எவராவது கனவிலும் நினைத்திருப்போமா? தேசியத் தொண்டும், தன்னலமின்மையுங்கொண்ட உண்மைத் தேசியத் தலைவர்கள் இன்றும் சிலர் இல்லாமலில்லை. ஆனால் அவர்களும், காங்கிரசின் பதவி கெடக்கூடாதென்ற நோக்கத்தில் நடப்பதாகக் காண்கிறதே யொழிய, காங்கிரசின் பெயர் கெடக்கூடாதென்ற நோக்கத்தில் நடப்பதாகக் காணோம்!-. இப் பதவி மோகமே இன்று நாம் படும் பல அவஸ்தைகளுக்கும் அடிப்படை மர்ம காரணமாகும்.

இந்தியப் பிரதமர் நேரு எதையும் நல்லெண்ணத்துடனேயே தான் சொல்லியும், செய்தும் வருகிறார். ஆனால் அதைக் கொண்டு பயனனுபவிக்கக் காத்துநிற்கும் அவரது சகாக்கள், அவர் பெயரையே கெடுக்கும் செயல்களைச் செய்துவருகிறார்களே! சமீபத்தில் வெளியாகிய உயர்நிலை அதிகார வட்ட ஊழல்கள் இதை முழங்குகின்றனவே!-.

நகரசபைப் பொதுத் தேர்தல் வந்துவிட்டது!— பேச்செல்லாம் பொது நலனைப் பற்றித்தான்— சிந்தனையோ சுயகாரிய நிறைவேற்றத்தில்தான். நிலச் சீர்திருத்தம், வருங்காலப் பெருந் தேர்தலுக்குத் தேவையான ஆசைச் சொல்லாக இன்று ஆரம்பிக்கப்படுகிறது. உலகழிந்தாலும், நாடழிந்தாலும், மக்களழிந்தாலும், காங்கிரஸ் கட்சியார் கைக்கொண்ட நிலச் சீர்திருத்த முறைகள் கைவிடப்படாதென நேரு முழங்கிவிட்டார். உயர் மட்ட நிலச் சொந்தமும், கூட்டுறவுப் பண்ணையும் மக்கள்மீது சுமத்தத்தான்படும் என்று கோபாவேச வெறியுடன் கலந்தே பேசுகிறார் நேருஜீ! ஒன்றிரண்டு உத்தமத் தலைவர்களும் காங்கிரஸ் பதவி தேவலை காரணமாய் இதையே ஆமோதிக்கிறார்கள். இது, சமதர்ம சமூக ஸ்தாபனத்திலா முடியும்?— பிளவுண்ட நாடு சிதறுண்டு போகிறது இம் முழக்க காரணமாய்! அதிகாரத் தோரணை ஆட்சி, வியாபாரத் துறையிலும் முழங்குகிறது. தனிப்பட்டார், பொதுப்பட்டார் என்ற போட்டி மும்முரமாகி, எல்லாத் தொழிலும் தேசியமாகி அரசாங்கப் பொறுப்பில் சேர்வதாகிறது. அரிசி விற்க முன்வந்த அரசாங்கம் எண்ணையும், கரிகாயும், விற்கப்போகிறதாம்! — இன்னமும் என்னதான் விற்குமோ! அரசு செலுத்துவதைவிட்டு, வேறெல்லாம் ஏற்கும் போலும் நமது குடியரசு!

**பசுப் போர்வையில் புலியா?**

எந்த முகூர்த்தத்தில் குடியரசுச் சட்டம் பிறந்ததோ தெரியவில்லை! முதியோர் வாக்குரிமை, ஜாதிபேத ஒழிப்பு, மாகாணப் பிரிவினைகள், மதப்பற்றற்ற அரசாங்கம் இதுகளே சமதர்ம சமூகக் கொள்கையென்ற பசுப்போர்வையில் நடமாடி, இன்றைய குடியரசு அவதாரத்தை ஆட்டிவைக்கும் புலிச்சேஷ்டைகளாகிவிட்டன. குடிகளுக்கு உண்மையான உரிமைகளெதுவும் நடை

முறையில் கிடைப்பதே கிடையாது: உரிமைகளைச் சுமத்துவதற்குச் சிரமப்படும் கடுமைகளைக் கண்ட நமக்கு, உரிமைகளே இனி வேண்டாமென்றே தோன்றிவருகிறது! நாட்டுப் பிரிவினைகளும், பாஷைப் பிரிவினைகளும், கட்சிப் பிரிவினைகளும், நாட்டில் ஒற்றுமையின்மையும், பதவிப் போராட்டமுமே மலிந்து பெருகி வேரூன்றி வளர்கின்றன. மக்களுக்குச் சுதந்திர வாழ்க்கையே கசந்துவிட்டது!

படித்துப் பகுத்தறிவு கொண்டோர்க்குமட்டுமே வாக்குரிமை இருக்குமாகில், உண்மைத் தேசியத் தொண்டர்களைத் தேடியெடுக்கும் வாய்ப்பு, சுதந்திர இந்தியாவில் இருந்திருக்கும். அப்படிக் கல்லாத வயதுவந்தோர் வாக்குரிமை என்பது, சுயநலதாரர் தமது போட்டியைப் பெருக்கிடும் சாதனமாகவே அமைந்துவிட்டது. பதவி மோகத்தால் காங்கிரஸ் கட்சியில் பலர் சேர்ந்தனர். அன்னார்களால் காங்கிரஸ்கட்சி இன்று பாழடைந்ததென மனம் வெறுத்துப் பல பிரமுகர்கள் காங்கிரஸ் கட்சியினின்றும் விலகித் தனிக்கட்சிகள் ஸ்தாபித்து வருகின்றனர். இது நாட்டின் நலத்திற்கா? காங்கிரசின் பெருமைக்கா?—குடியரசுப் போக்கா?— மதப்பற்றோ, தெய்வீக உணர்ச்சியோ சிறிதும் பாராட்டாத பதவிப் பித்தேறிய அதிகாரிகளைக்கொண்ட நாடு, 'புலி கிடந்த தூறு' தான். சமத்வமும், சமதர்மமும் பிறப்பிடமான ஆதிசக்தியாம் அந்தர்யாமியை மறந்து, அனுதரவும் செய்து, மானிடபலம் நம்பிப் போட்டியிடும் நாட்டில் சமதர்ம சமூக ஸ்தாபனம் எப்படிக் கூடும்?

ஆதியில் சிற்றரசர்கள் பெருகிப் போட்டியிட்டுப் பதவி பெற்றிடப் பிறநாட்டார் உதவிகோரித் திரிந்தது போலவேயல்லவா, இன்றும், சுதந்திர இந்தியாவில் உள்நாட்டுக் கட்சிகள் கணக்கிலாது பெருகிப் போட்டியிட்டுப் பதவிபெற்றிடப் பதைக்கின்றன! பிறநாட்டார் உதவியும் தேட ஆரம்பித்துவிட்டன! முன்னர் அந்நியரை இந்நாட்டில் வரவழைத்தது போலவே இன்றும் எக்காரணங் கொண்டாயினும் எத்துறையிலாயினும் அன்னிய நாட்டாரை நம்நாட்டுள் வரவழைத்துப் போட்டி பெருக்குகிறோமே! இதன் பிற்கால விளைவைச் சிந்திப்பார் இல்லையா?

## கூட்டுறவு முறைக்கு இது அஸ்திவாரமா?

கூட்டுறவுப்பண்ணை எதற்கு?—கூட்டுறவு அரசியல் ஸ்தாபிதமானால் இதர கூட்டுறவுகள் தாமாகவே வலிய ஏற்படுமே! ஆந்திராவில் காங்கிரஸ் பிளவு—நாகபுரி தீர்மானங்கள் காரணமாகக் காங்கிரஸ் கட்சியில் பெரும் பிளவுகளும், பிரிவுகளும், எதிர்ப்புக் கட்சிகள் நிறுவலும்! காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டி தலைவி முன்னைய காங்கிரஸ் வாதிகளைத் தனது கட்சிக்குத் திரும்பக் கூப்பிடுகிறாள்!—பொட்டி ஸ்ராமுலு மரணத்திற்குப் பயந்து ஆந்திரா பிரிவினை! பாஷைப் போராட்டம் பம்பாயை உலுக்கிக் கொண்டேயுளது. இலங்கையை விடாது பிடித்துளது. தேசிய பாஷைப் பிரச்சினை மாகாணங்களுக்கிடையே மனவேற்றுமையு மிருக்கிறது.

## கடன் வாங்கித் திட்டத்தை நிறைவேற்றுவதா?

மத்திய சர்க்காரிலும் மாகாண சர்க்கார்களிலும் நிதித் திட்டப் பேச்சுரைகள் முடிந்தது. மத்திய சர்க்காரில் பற்றுக்குறை நிதித்திட்டம்: மாகாண சர்க்காரில் உபரி நிதித்திட்டம் காட்டிவிட்டார்கள். ஆனால் மாகாணத்தில் உள்ள அரிசி அகப்படவில்லை. கேரளாவுடன் அரசியல் போராட்டத்தோடு அரிசி போராட்டமும் தொடர்கிறது!—இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் முடியவும், மூன்றும் ஐந்தாண்டு திட்டம் ஆரம்பிக்கவும் தீவிர முஸ்தீப்புக்களும் பிரசாரங்களும் நடந்தேறி வருகின்றன. வளர்ந்து வருமென்ற அந்நிய நாட்டுதவிகள், அங்கேயே பண நெருக்கடி காரணமாக, நமக்குக் குறைவுபடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடன் வாங்கி, இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தையாவது முடித்துவிட வேண்டுமாம்! மூன்றும் ஐந்தாண்டு திட்டமும் முடிய வேண்டுமாம் நாடு எந்தக் கேடு கெட்டாலும்!—இது, குடியரசுக் கொள்கையா?—பிடிவாதம் நிறைவேற்றவா காங்கிரஸ் கட்சி அரசு பதவி கைக்கொண்டுள்ளது?—புது வரிகள் சுமத்தவும் பழைய வரி பாக்கிகள் வசூலிக்கவும் மும்முறவாத பேத தீர்மானங்கள் நடக்கின்றன. இதனால் சுரண்டுவோர் மும்முறமும், எளியோர் கஷ்டமுந்தான் அதிகரிக்குமேயொழிய பணமுடை தீரப் போவதில்லை. பிளவுகளை நாட்டில் பெருக்கி, பிடிவாதத்தைச் சாதித்துக்கொள்ள பிறநாட்டார் பக்க பலமும் கோரும் கட்சிகள் நிறைந்த நாட்டில் குடியரசோ சுதந்திரமோ வளரவோ நிலைக்கவோ கூடுமா?—நம்மைச் சுற்றியுள்ள அந்நிய நாடுகளிலாவது சமாதான நிலை உளதா? வல்லரசுகள் போக்கும், உயர் மட்டப் பேச்சும் பகல் கனவாய் வருகிறது!—பாகிஸ்தானுக்கு உதவி வாக்கு அரசியல் வட்டாரத்தில் இருள் பரப்பி வருகிறது.

நேருஜீ எப்ரல் 14 முதல் 17 வரை சென்னையில் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறாராம்!—பாவம்!—எதற்கு?—நாகபுரி தீர்மானங்களைப் பற்றிய பேரிரைச்சல் நாடெங்கும் செவிடுபட கேட்பதை அடக்கவா?—சட்டக்கமிஷன், நீதிபதிகள் நியமன ஊழல்களை அம்பலப்படுத்திய அவமானத்தை அழித்துப் போக்கவா?—சென்னை மாகாணத்தாரை முகஸ்துதி செய்து காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தேடவா?—அல்லது அவர்களைப் பயமுறுத்தித் தன் கைப்பொம்மையாக்கிக் கொள்ளவா?

எதுவானாலும், எச்செயலும், சுயகட்சிக்குப் பதவி நிலைத்திடச் செய்யும் பிரசாரமேயொழிய, பொது நலத்திற்குச் சுயபலம் தியாகம் செய்யும் செயலல்லவே!

இன்றைய சுதந்திர இந்திய சரித்திரம், ஆதிப் பிளவு மலிந்த இந்துதேச சரித்திர நிலையைத்தானே காட்டுவதாகிறது! தேச சரித்திரம் உணர்த்தும் பாடம் பொய்யாகாதே!— இனியாவது, காங்கிரஸ்கட்சி, ஆளுங்கட்சியென்ற பதவிமோகம் விட்டு, தேசிய நலங்கோரும் கட்சியெனத் தன்னை மதித்து, ஆளத் தகுந்தோரை பதவிக்கேற்றி, தான் வெளிப் புறத்திருந்து, மக்கள் பக்கம் மனம் செலுத்தி, இந்திய ஒற்றுமையை பிறர் கை உதவி கோராது திரும்பவும் உண்டாக்குமா?

## ஸம்சார சக்கரம்.

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

### சமையல் அறை

இப்பொ சமையல் அறையைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளும் முறையைப் பற்றி கொஞ்சம் யோசிப்போம். 'ஒவ்வொரு வீட்டிலும், அந்த வீட்டின் சமையல் அறைதான் அந்த வீட்டில் வசிப்பவர்களின் சுகத்துக்குக் காரணம்' என்று சொல்வதில் தவறில்லை. பரிசுத்தமான சூழ்நிலையில் பரிவும் ருசியும் சுசியுமான சமையல்தான் குழந்தைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. மற்றும் சமையல் அறை நல்ல காற்றோட்டமாகவும், வெளிச்சமாகவும் இருந்தால்தானே அவ்விடத்தில் நாளின் வெகு பகுதியைச் செலவழிக்கும் குடும்பப் பெண்களின் உடல் நிலையும் கெடாமல் சுகம்பெறும்.

வாரம் ஒரு முறையாவது ஒழிந்த பொழுது சமையல் அறையின் புகைப் போக்கி, கூரை, ஜன்னல், அலமாரிகள், செவுத்து மூலை முடுக்குகள், கதவு மூலைகள்.........ஒவ்வொரு இடத்தையும் ஒட்டடை அடித்து, பெருக்கி, D. D. T. Powder போன்ற பூச்சிகளை நாசமாக்கும் பொடிகளைத் தூவ வேண்டும். அப்பொழுதுதான் கரப்பான் பூச்சி, எறும்பு, தேள் போன்றவைகளின் தொந்தரவு இன்றி, அறை பரிசுத்தமாக இருக்கும். புழுக்களை நாசமாக்கும் பொடியைத் தூவும் பொழுது வெகு எச்சரிக்கையுடன், சாப்பிடும் பண்டங்களில் அவை படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். அவை மனிதனை கொல்லக்கூடிய தன்மையுள்ளவை. பத்திரிகைகளில் Folidol என்னும் தயாரிப்பு கேரள நாட்டில் செய்த அட்டூழியத்தை நீங்கள் படித்திருப்பீர்.

நாள்தோறும், பகலும் இரவும் போஜனம் முடிந்ததும், அடுப்பையும், அடுப்பின் சுற்று முற்றிலும் பத்துப் பாத்திரங்களை எடுத்து அப்பால் அகற்றி தேய்க்கப் போடும் இடத்தில் போட்டு வந்து, இடத்தைத் துடைத்துத் துப்புருவாக்கவேண்டும், குழாயடி தொட்டியை நன்றாகத் தேங்காய், துடப்பக் குச்சி பிரஷ்ஷால்தேய்த்து அலம்ப வேண்டும். தொட்டியை (Sink) அலம்புவதற்கு முன்னால் அவ்விடத்தில் இறைந்து கிடக்கும் கறிகாய்த் தோல்கள், சாத்து பறிக்கை...எல்லாவற்றையும் பெருக்கி வெளியே எறிந்துவிட்டு வந்து தொட்டியை அலம்பி விடவேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிடில் அந்தப் பண்டங்கள் தொட்டியின் ரந்திரத்தை அடைத்துக் கொண்டு அழுகிப்போய், ஜலத்தையும் தாராளமாக ஓடவிடாமல், ரூம் முழுவதும் நாற்றத்தைக் கிளப்பும்.

உங்கள் வீடு முழுவதும் நாளுக்கு இருமுறை பெருக்கி

விட்டால் போதும், ஆனல் சமையல் அறையை மாத்திரம் நாளுக்கு நாலு தடவையாவது பெருக்கியாக வேண்டும். அடிக்கடி தேங்காய்ப்பூ, பக்ஷணம் பண்டம்......போன்றவைகளின் சிறு தூள்கள் இறைந்து விடுகின்றன. ஆதலால், அவைகளை எறும்பு, ஈ முதலியன மொய்த்துக் கொள்ளாதபடி அவ்வப்பொழுது சமையல் அறையைப் பெருக்கி சுத்தப்படுத்த வேண்டும். பெருக்கிய குப்பையையும், காய்கறி நறுக்கின தோல் வகையராக்களையும் கண்ட இடங்களில் எறியக்கூடாது. உங்கள் வீட்டுத் தோட்டத்தில் ஒருபுறமாக எருவுக் குழி வெட்டி, அதில் சேகரியுங்கள். குப்பை கறிகாய்த் தோல் முதலியவைகளை அந்தக் குழியில் போட்டதும் அதன்மேல் மண் தூவிவர மறக்கக்கூடாது. செடிகளுக்கு நல்ல எருவுமாயிற்று. வீட்டில் தோட்டம் இல்லாத பக்ஷத்தில், கொல்லைப்புறத்தில் ஒரு பெரிய டப்பாவை வைத்து, அதில் சேகரித்து மூடலாம். நாளுக்கு ஒரு முறையாவது இந்த டப்பாவின் குப்பையைக் கொண்டுபோய் தெருவில் உள்ள குப்பைத் தொட்டியில் (Dust Bin) கொட்டிவர வேண்டும்.

சமையல் அறையில் டப்பாக்களையும், ஊறுகாய் சீசாக்களையும் அடுக்கி வைக்கும் அலமாரியில் ஒழுங்காகப் புதிய காகிதத்தை மடித்துப் போட்டு மறுபடியும் அடுக்கி வைக்க வேண்டும். இந்தக் காகிதங்களை அடிக்கடி மாற்றுவதற்கு மறக்கக்கூடாது. அச்சமயம் டப்பாக்களையும் சீசாக்களையும் துடைத்து, தூள் அடித்து கீழே எடுத்து வைத்து விட்டு அலமாரியை நன்றாகப் பெருக்கி துடைத்து D. D. T. Powder தூவி, புதுக் காகிதம் மாற்ற வேண்டும். அதன் பிறகே மறுபடியும் எல்லாச் சாமான்களையும் அதனதன் இடத்தில் வைக்க வேண்டும். எறும்பு, ஈ, கரப்பு, கொசு இவைகளின் உபத்திரவம் இராது. ஆனல், பாத்திரங்களை அடுக்கும் Rackற்கு மாத்திரம் D. D. T. Powder இன் தண்டாவே வேண்டாம். அது ஆரோக்யத்தைப் பாதிக்கும்.

சில பெண்மணிகள் சமைத்த பண்டங்களை மட்டும் மூடி வைத்து விட்டால் போதும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். புளி, உப்பு, மிளகாய் பொடி, எண்ணை, ஊறுகாய் வகைகள், அஞ்சறைப் பெட்டி... எல்லாவற்றையும் கூட உபயோகித்த உடன் மறுபடியும் நன்றாக மூடவேண்டும். சாப்பிடும் பண்டங்கள் எதுவானாலும் சரி, திறந்து கிடந்தால் பல்லி, தேள், புழுப் பூச்சிகள் தீண்டின பண்டங்களால் தயாரிக்கப்பட்ட சமையலும் தான் விஷம்.

மற்றொரு முக்கியமான வேலை: ஊறுகாய், மோர்...முதலியன பரிமாறிய ஸ்பூன்களையும் கரண்டிகளையும் உடனுக்குடன் அலம்பி வைக்க வேண்டும். அல்லது, ஒரு பாத்திரத்தில் சுத்தமான ஜலம் நிறைத்து வைத்து, அதில் மேற்கண்ட கரண்டிகளையும், ஸ்பூன்களையும் ஊரப் போடுவது நலம். பிறகு கை ஒழிந்த பொழுது அலம்பி வைக்கவும். சில பெண்கள் அவைகளை அலம்பாமலேயே அப்படியே வைத்திருந்து, இரவிலும் பரிமாறிவிட்டு ஒருமிக்க

அலம்பிக்கொள்ளலாம் என்று அசட்டையாக இருந்து விடுவதுண்டு. அச்சமயம், அவைகளின் மேல் ஈயும், கொசுவும் உட்கார்ந்து அவைகளை அசுத்தமாக்கி விடுவதால் அனாரோக்கியத்தைச் சம்பாதித்து கொள்கிறோம் அல்லவா?

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும், சமையல் அறையில் எல்லாவற்றையுமே மூடி வைத்து விட்டு, ஊறுகாய் ஸ்பூன், மோர்க் கரண்டி... இவைகளையும் அலம்பி வைக்க வேண்டும். பிறகு மற்றொரு முறை அறையைப்பெருக்கி, அடுப்படியையும், தொட்டியையும் அலம்பிவிட்டு, ஜன்னல்களை நன்றாகத் திறந்து வைத்து விட்டுக் கதவைத் தாழ்ப்பாளிட்டு வரவேண்டும். சமையலறையின் மற்றும் சாமான் அறைகளின் ஜன்னலுக்கு வலைக் கம்பி அடித்து விடுவது அவசியம். அப்பொழுதுதான் பூனை, எலிகளின் தொந்திரவு இராது.

கை துடைத்துக் கொள்வதற்கே ஒரு தனித் துண்டு, சுடும் பாத்திரங்களை பிடித்து இறக்க ஒரு தனித் துண்டு என்று வைத்துக் கொள்வது நலம். சமையல் அறைத் துணிகள் எப்படி இருந்தால் என்ன என்று இருக்கக் கூடாது. காலையிலிருந்து மாலை வரைக்கும் உபயோகிக்கும் அந்தந்தத் துணிகளில்தான் எண்ணைப் பிசுக்கும் ஏகமாகச் சேர்ந்து மண்டிக் கிடக்கும். ஆதலால், தினந்தோறும் சமையல் அறையின் காரியங்கள் அனைவதும் முடிந்த பிறகு, இந்தத் துண்டுகளுக்கு சோம்பல் படாமல் சோப்புப் போட்டுக் கசக்கி உலர்த்த வேண்டும். மறுநாள் உபயோகத்துக்கு அவை பரிசுத்தமாகவும் மடியாகவும் இருக்கும். இது போன்ற சிறிய காரியங்களைச் செய்ய சோம்பல் படுவதால்தான் அநாரோக்கியம் அதிகரிக்கிறது.

சமையல் அறையில் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு பண்டமும் பரிசுத்தமாக இருந்தால்தான், சமையலும் ருசியாகவும் பரிசுத்தமாகவும் இருக்க முடியும். நாம் வேறு ஏதோ காரியமாக இருந்துவிட்டு வந்தாலும், கொல்லைக்குப் போய் வந்தாலும் கைகளிரண்டையும் சோப்பு தடவி நன்றாக அலம்பிக் கொண்ட பிறகே சமையல் காரியத்தில் ஈடுபட வேண்டும். இதற்காகவேண்டிசமையலறையின் குழாயடியில் எப்பொழுதும் ஒரு சோப்புக் கட்டியை வைத்திருப்பது நலம்.

இந்த நாகரீக யுகத்தில் சமையல் அறைக்கும், சாமான் அறைக்கும் கவனம் செலுத்தும் பெண்கள் வெகு குறைவு. தங்கள் திறமை முழுவதையும் 'டிராயிங் ஹா'லைச் சிங்காரிப்பதில் செலவிடும் பெண்களுக்குத்தான் புகழ்ச்சி காத்திருக்கு! ஆனால், வீட்டு அலங்காரம் சுமாராக இருந்தாலும் கூட எல்லா சௌகரியங்களும் கூடி வீடு பரிசுத்தமாகவும் ஆரோக்கியத்தின் இருப்பிடமாகவும் இருப்பதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது.

தற்காலம், நகரங்களில், மின்சார சக்தியால் இயக்கப் படும் அடுப்புகளில் பெண்கள் சமைக்கிறார்கள். இந்த அடுப்புகளை உபயோகிக்கும் வழி மிக சுலபமானாலும், வெகு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். வெகு அபாயகரமானவை

இல்லை. எப்பொழுதும் மரப் பலகைமேல் நின்றுகொண்டே 'ஸ்விச்' பொருத்த வேண்டும். 'Fuse' அடிக்கடி கெட்டுப் போகும். அச்சமயம் 'Fuse' போடவும் கற்றுக் கொண்டிருப்பது நலம். இந்த 'எலக்ட்ரிக்' அடுப்புகளின் மேல் வைத்துச் சமைக்கவோ பால் காய்ச்சவோ அடிப்பாகம் தட்டையாக உள்ள பாத்திரங்கள் தான் நல்லது. அடி உருண்டையான பாத்திரத்தை இந்த அடுப்பின் மேல் வைத்தால் சூடு சீக்கிரம் ஏறுவதில்லை. 'Current'டும் அனியாயச் செலவு.

பண்டையநாள் Primes Stove என்ற மண்ணெண்ணை அடுப்பு ரொம்ப அபாயகரமானது. ஆனால் தற்சமயம் 'Velor' Stove, 'பிரபாகர்' ஸ்டவ், 'நிர்பாய்' ஸ்டவ்...என்று புதுப் புது மாதிரியான மண்ணெண்ணை அடுப்புகள் கடை வீதியில் கிடைக்கின்றன. இவைகளில் சமைப்பதால் பாத்திரங்களும், அறையும் கரி ஆவதில்லை. காரியமும் சுலபமாகமுடிகிறது. ஆனால், ஒரு முக்கிய விஷயம் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த அடுப்புகளின் அருகில் இதற்கு உபயோகிக்கும் மண்ணெண்ணை டப்பாவை வைக்கக் கூடாது. எங்கேயோ எரியும் அடுப்பின் மேல் வீசிய காற்று டப்பா மேல் பட்டு, டப்பா எண்ணெய்யும் 'பக்' என்று பற்றிக் கொண்டு விட்டால், வீட்டிற்கும், வீட்டில் இருப்பவர்களுக்கும் அபாயமல்லவா?

பாத்திரங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள்:--டம்ளர்கள், காப்பி டபராக்கள்... இவைகளுக்கு என்றே பிரத்யேகமான தொரு இடமோ, அலமாரியோ அல்லது ஸ்டாண்டோ மற்றும் பெரிய பாத்திரங்களுக் கென்றே மற்றொரு ஸ்டாண்டும் வேண்டும்.

குழம்பு, ரசம்... தயாரிப்பதற்குச் சிலர் பித்தளைப் பாத்திரங்களை உபயோகிப்பதுண்டு. இதைவிடகற்சட்டியே ஆரோக்யகரமானது.சில படித்த பெண்களோ வெளில் கற்சட்டிகளையும், மண்பாண்டங்களையும் உபயோகிப்பது அநாகரீகமென்று எண்ணுகிறார்கள். ஆனால், அவைபோன்ற ஆரோக்கியகரமான பாத்திரங்கள் வேறில்லை. பித்தளைப் பாத்திரம் என்றால், அதனுள் கொஞ்சுண்டு ஈயம் அழிந்து போயிருந்தாலும் அதற்கு மறுபடியும் ஈயம் பூசாமல் அஜாக்கிரதையுடன் சமைத்தோமென்றால் சுகக் குறைவு. அல்யூமினியப் பாத்திரமும் அவ்வளவுதான். உப்பு புளி பட்டால் சீக்கிரம் ஓட்டையாகிவிடும். அல்லாமல் அல்யூமினியத்தில்சமைப்பதால் பாத்திரம் தின்றுவிடுவதல்லாமல் விஷப்பிராயம் என்கிறார்கள். தற்சமயம் 'எவர்ஸில்வர்' அல்லது 'ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்' பாத்திரங்கள்தான் வந்திருக்கின்றனவே. இவை ஆள வெகு உத்தமமானவை. அலம்புவதும் வெகு சுலபம். பால் தோய்க்கவும் இவை ஏற்றவையானதுதான். ஆனால், இவைகளைவிட ஜாடி, கற்சட்டி, சட்டி, பானை இவை மேன்மையானவை. மேலும், பாலுக்கும், தயிருக்கும் 'எனமல் பாத்திரங்களையும் உபயோகிக்கலாம். ஆனால் கைதவறி விழுந்தால், எனமல் கொஞ்சம் விரிசல் விட்டாலும், இரும்பு தென்பட்டு உபயோகத்துக்குஉதவாது.(தொடரும்

# ★வ்ருதாதிகவின் மகிமை★

சம்பத் சுக்ரவாரம்

— ஏ. சரோஜா பாய் —

—●❀●—

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று சொல்லுவது வழக்கம். தை மாதம் பிறக்கும் முன்பே கல்யாண சத்திரங்களுக்கும் மேளக்காரர்களுக்கும் ஏகக் கிருக்கி. நாளுக்கு 4 கல்யாண அழைப்பு வந்து குவிந்து கொண்டே இருக்கும்.

தை மாதம் என்ருல் நல்ல சுபகரமான மாதம். அநேக நற்காரியங்களினுல் மன திற்குச் சந்தோஷம் ஏற்படுகிறது. ஆடி மாதங்களில் செய்ய முடியாத அநேகவ்ரதாநுஷ்டானங்களைக் கூட தை மாதம் செய்வது வழக்கம். அதில் வெள்ளிக்கிழமைகளில் செய்யும் ஒரு பூஜையைப் பற்றி விவரிப்போம்.

எந்தத் தாயாருக்கும் தன் குழந்தைகளைப் பிரிந்து இருப்பதென்ருல் கவலை. தூர தேசத்திலிருக்கும் பிள்ளைகளை நினைத்து வருத்தப்படாத தாயார்களே கிடையாது. "என் பிள்ளை பெரிய உத்தியோகத்தில் இருக்கிருன்; நிறைய சம்பாதிக்கிருன் என்று மேலுக்குப் பெருமையாகச் சொல்லிக்கொண்டாலும் உள்ளுக்குள் கொஞ்ச சம்பாத்யமானுலும் பரவா இல்லை. தன்னிடமே இருக்க கூடாதா என்று அவர்கள் மனசு ஏங்கும். இத்தகைய தாயார்களுக்கென்றே ஏற்பட்டது இந்த வ்ரதம். எங்கே இருந்தாலும் தன் பிள்ளை க்ஷேமமாக இருக்க வேண்டுமென்று ஒரு தாயார் வேண்டிக்கொள்ளும் முறையை இவ்விரதமும் இக் கதையும் விவரிக்கிறது. இப் பூஜைக்கு கதைதான் முக்யம்.

மகாராஷ்ட்ரா அவர்களால் இப்பூஜை அதிகமாகக் கொண்டாடப் படுகிறது. இதற்கு ஒரு படத்தில் தாயையும் பல குழந்தைகளையும் சேர்த்து வரைந்து அதை வெற்றிலை இலைகளால் அலங்கரித்துப் பூசிப்பது வழக்கம். ஆனுல் சாதாரண வெள்ளிக் கிழமை அவரவர்கள் வழக்கப்படி செய்யும் லக்ஷ்மி பூஜை முடிந்த உடன் இந்த பின் வரும் கதையை மனதில் தியானித்துக் கொண்டே, அல்லது பிறருக்குச் சொல்லியோ முடிந்த உடன் ஒரு சுமங்கலிக்குச் சாப்பாடு போட்டு வெற்றிலை பாக்கு மஞ்சள் குங்குமம் கொடுப்பது வழக்கம். கடைசி வெள்ளிக்கிழமை அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி ஒரு சுமங்கலிக்கு ரவிக்கையோ புடவையோ கொடுத்தால் நல்லது.

இக்கதையின் விசேஷத்தால் யுத்த முனைக்கு சென்ற அநேக குமாரர்கள் சௌக்யமாக திரும்பிவந்து தங்கள் பெற்ரேர்களை சந்தித்தார்கள். இது அனுபவத்தில் கண்ட உண்மை. கதையின் விவரம்.

ஒரு ஊரில் ஒரு அரசன். அவனுக்குக் குழந்தைகள் இல்லாத குறையே பெரிய குறையாக இருந்தது. அதற்கான எத்தனை தான தர்மங்கள் தீர்த்த யாத்திரைகள் செய்ய வேண்டுமோ அத்தனையும்

செய்தும் பலன் இல்லாமல் இருந்தது. ராஜ்யத்தை ஆளத் தனக்கு ஒரு பிள்ளை இல்லையே என்று சதா கவலைப்பட்டுக் கொண்டு இருந்தார்கள் தம்பதிகள். வயதும் கடந்து கொண்டே வந்தது. பிள்ளையில்லாத குறையின் காரணமாகவே வாழ்க்கையில் வெறுப்புற்ற அரசன் கடைசியாக தபசுக்காகக் காட்டுக்குப் போவதென்று தீர்மானித்தான். முன் காலத்தில் தவத்தினால் பல வரன்களைப் பெற்றார்கள். தசரதன் குழந்தைகளைப் பெற்றான். அதனால் நாமும் தபசு பண்ணிப் பார்க்கலாம் என்று அவர் உள்ளம் திட்டமிட்டது. அதற்கான ஏற்பாடுகளை செய்ய முனைந்தார் அரசர்.

அரசர் காட்டுக்குப் போகிறார் என்ற செய்தியைக் கேட்ட மகாராணி துடிதுடித்தாள். பிள்ளை இல்லாத ஒரே குறை மட்டும் அல்லாமல் கணவனைக் காட்டுக்கு அனுப்பும்படியான கதி நேர்ந்ததே என்று கலங்கினாள். காட்டில் துஷ்ட மிருகங்களால் அவருக்குத் தீங்கு ஏற்பட்டால் என்ன செய்வது என்று அவள் உள்ளம் பாகாய் உருகியது. அரசரிடம் போய் அவர் காலில் விழுந்து இத் தீர்மானத்தை மாற்றிக்கொள்ளுங்கள் என்று மன்றாடினாள். ஆனால் அரசன் ராணிக்குச் சமாதானம் சொன்னாரே தவிர தன் மனதை மாற்றிக்கொள்ளவில்லை. காட்டுக்குப் போகும் நாளும் நெருங்கிக் கொண்டே வந்தது. ராஜ்யத்தில் அரசர் இல்லாமல் நடத்துவதற்குப் பல ஏற்பாடு ஆகிவந்தது. பிள்ளைக்காகக் கணவனையே இழக்கும்படி நேருமோ என்று நினைக்கும்போது ராணிக்குத் திகில் மனதைப் பாதித்தது.

அரசர் புறப்படும் நாள் நெருங்கிக் கொண்டே வந்தது. ராணியோ இரவு பகல் அழுது கொண்டே இருந்தாள். கடைசியாக அழுவதில் உபயோகம் இல்லை. தன் மாங்கல்யத்தைக் காப்பாற்றிக்கொள்ள ஏதாவது உபாயம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தாள். தன் மாங்கல்யத்தைக் காப்பாற்றிக் கொள்ள எத்தனை பொய் சொன்னாலும் பாதகம் இல்லை என்று அவளுக்குத் தோன்றியது. அதனால் அரசர் புறப்படும் சமயம் பார்த்து, "நாதா, தாங்கள் காட்டுக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. இன்னும் 5 மாதங்களில் நமக்கே ஒரு குழந்தை பிறக்கப் போகிறது.நான் 4 மாதம் கர்ப்பமாக இருக்கிறேன்" என்று ஒரு பொய்யைச் சொல்லி வைத்தாள். இவர்களால் பணம் கொடுத்து ஏற்பாடு செய்து வைத்த மருத்துவச்சி ஒருவள் ராணி சொல்லுவது வாஸ்தவம் என்று சாக்ஷி சொன்னாள். இந்தச் சூதை அறியாத அவர் சந்தோஷத்தில் மூழ்கினார். தனக்கு அதிகம் சிரமம் கொடுக்காமலேயே வரம் கொடுத்துவிட்டார் என்று கடவுளிடம் அவருக்கிருந்த பக்தி ச்ரத்தை அதிகமாயிற்று.

ஊரெல்லாம் அலங்கரிக்கப் பட்டது. ஏழை எளியவர்களுக்கெல்லாம் வஸ்திரம் சாப்பாடு அளிக்கப்பட்டது. ஜனங்களெல்லோரும் மிக்க ஆவலாக இளவரசரின் வருகைக்கு காத்து இருந்தனர். தன் கணவனை நிறுத்த வேண்டிப் பொய் சொல்ல நேர்ந்ததைக்

குறித்து மிக்க வருத்தப்பட்டாள் மகாராணி. மேலே ஆக வேண்டிய காரியத்துக்கு என்ன செய்வது என்று வருத்தப்பட்டாள். தனக்கு உடந்தையாக இருந்த மருத்துவச்சியை வரவழைத்து இதற்கு ஏற்ற உபாயம் என்ன என்று யோசித்தார்கள். கடைசியாக அந்த ஊரில் இதே மாதமாக எந்தப் பெண்பிள்ளை இருக்கிருளோ, அவள் ப்ரசவித்த உடன் அக் குழந்தையைக் கொண்டு வந்துவிடுவது என்று ஏற்பாடு ஆயிற்று. அரண்மனை வைத்தியச்சியான அவளிடம் ஊரெல்லாம் தேடி எப்படியாவது இந்த ஏற்பாட்டை செய்துகொண்டு வரவேண்டுமென்று வேண்டிய பணத்தைக் கொடுத்து அனுப்பினுள்.

அந்த ஊரில் ஒரு ஏழை ப்ராமணன் தாய் தகப்பன் அற்ற அனுதை. தன் ஏழ்மைக்கு ஏற்ற ஒரு சிறுமியை விவாகம் செய்துகொண்டு இருந்தான். வீட்டில் பெரியவர்கள் யாரும் இல்லாததாலும், அப் பெண்ணுக்கும் யாரும் துணை இல்லை. இதுவே முதல் கர்ப்பமாதலால் அவர்கள் என்ன செய்வது என்று திக்குத் தெரியாமல் தவித்துக்கொண்டு இருந்தார்கள். அந்தச் சமயம் அரண்மனை மருத்துவச்சி இங்கு வந்து சேர்ந்தாள். இந்தச் சிறுமியின் மாதமும் மகாராணி சொல்லிக்கொண்ட மாதமும் சரியாக இருக்கவே, அவளுக்குக் குஷி பிறந்துவிட்டது. அதுவும் அல்லாமல் ஒரு ஏழை ப்ராமணனை இருப்பதால் சுலபமாக ஏமாற்றிவிடலாம். அதுவும் திக்கற்றவர்களாக இருக்கிருர்கள் என்று சந்தோஷப்பட்டு, அச் சிறுமியைப் பார்த்து மிக்க அன்பாக "அம்மா...குழந்தாய் என்னை உன் சொந்தத் தாயாரைப் போல் நினைத்துக்கொள். ஏழை எளியவர்களுக்கு உபகாரம் செய்வதையே என் தொழிலாக வைத்துக் கொண்டு இருக்கிறேன். ஏதோ பெரிய மனிதர்கள் வீடுகளிலும் அரண்மனையிலும் நான் போய் வருகிறேனே என்று பணத்தாசை பிடித்தவள் என்று நினைக்காதே. என் கைராசி நன்ருக இருப்பதால் என்னைக் கூப்பிடுகிருர்கள். உனக்கு நோவு என்ற உடன் எனக்குச் சொல்லி அனுப்பு. நான் எந்த நேரமானுலும் ஓடோடி வந்து உனக்குச் சகாயம் செய்கிறேன்" என்று பலவிதமாக அவளிடம் அன்பாகப் பேசி அந்த ஏழைச் சிறுமியை மயக்கி, தனக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டாள். அந்தச் சிறுமியைப் பார்க்கப் பார்க்க அவள் உள்ளம் மகிழ்ந்தது. அவளுடைய அழகு இவளை ப்ரமிக்கச் செய்தது. தாயாரைப் போல் பிள்ளையோ பெண்ணோ இருந்தால் ராஜ்யத்துக்கு ஒரு மிக்க அழகிய ராணியையோ ராஜாவையோ எதிர்ப்பார்க்கலாம் என்று திட்டமிட்டது. ஏழை ப்ராமணனுக்கும் அவன் மனைவிக்கும் எல்லை இல்லாத சந்தோஷம். பகவானின் லீலையை நினைத்து மகிழ்ந்தார்கள். "திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை" என்றபடி தெய்வம்தான் தன் கஷ்டத்தைப் பார்த்து இத்தகைய நல்லவர்களை அனுப்பி உதவுகிருர் என்று நினைத்து கவலையற்று நாட்களைக் கடத்தி

வந்தார்கள். ப்ரஸவ காலமும் சமீபித்தது. இச் சிறுமிக்கு நோவு என்ற விஷயம் மருத்துவச்சிக்கு எட்டிய உடன் அரண்மனைக்கு ஆளை அனுப்பினாள். மகாராணி ப்ரசவ வேதனைப்படுவதாக அரண்மனையில் ஏக தடபுடல் நடந்துகொண்டு இருந்தது. ஏழை ப்ராமணனின் வீட்டுக்குச் சென்ற மருத்துவச்சி அச் சிறுமியின் கண்களை இருக்கக் கட்டி குழந்தை அழுகுரல் கேட்கக் கூடாது என்று அவள் காதில் பஞ்சு அடைத்துப் பல உபத்திரவங்களைச் செய்துவந்தாள். இதுவே முதல் தடவை ஆதலால் ஒன்றும் அறியாத அச் சிறுமி இப்படித்தான் இருக்க வேண்டுமென்று நினைத்து, அவள் ஆட்டியபடி ஆடிக்கொண்டு இருந்தாள். ஏழைச் சிறுமிக்கு அழகான ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மருத்துவச்சியால் ஏற்படுத்தி இருந்த அரண்மனை ஆளிடம் கிருஷ்ண விக்ரஹத்தைப் போல் இருந்த அக் குழந்தையை ரகஸ்ய வழியாக அரண்மனைக்கு அனுப்பிவிட்டாள். காலமும் இரவாக இருந்ததால் அவள் வேலை சுலபமாக முடிந்தது. தன் வேலை முடிந்த உடன் அந்த ஏழைச் சிறுமியின் கண்கட்டை அவிழ்த்துவிட்ட மருத்துவச்சி ஏளனமாக அவளைப் பார்த்து கைகொட்டிச் சிரித்து, "அடி பெண்ணே! என்ன அநியாயம்! உனக்கு மரக்கட்டைதான் பிறந்தது. அது நீ செய்த பாபம்" என்று சொல்லி தன் வேலைகளை எல்லாம் சீக்கிரமாக முடித்துக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டாள். தனிமையாக விடப்பட்ட அச் சிறுமிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. தனக்குப் பிறந்தது குழந்தைதான் மரக்கட்டை அல்ல என்று நன்ருகத் தெரிந்துகொண்டாள் அச் சிறுமி. குழந்தையைப் பார்க்க வேண்டுமென்று தாய் உள்ளம் தவித்தது. ஆனால் ஒன்றும் செய்யத் தெரியாமல் துடித்தாள். அவளோ பல பெரிய மனிதர்கள் வீட்டில் பழகும் மருத்துவச்சி, அவள் தன்னை ஏமாற்றினாள் என்று சொன்னால் யாரும் தன்னை நம்பமாட்டார்கள். இது அனுவச்யமான சண்டைக்கும் தனக்கு மரக்கட்டை பிறந்த தென்ற சிரிப்புக்கும் ஏளனத்துக்கும் காரணமாகுமே தவிர ஒருவிதத்திலும் பலிக்காது என்று தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு கணவனைக் கூப்பிட்டு நடந்தவற்றை எல்லாம் சொன்னாள். செய்வதறியாத அந்த ஏழை ப்ராமணன் கண்ணீர் விட்டுக் கலங்கினான். உயிருடன் குழந்தையை இழந்துவிட்டோமே, அந்தக் கிராதகி பணத்தாசைக்காக எந்தப் பலியிடும் கோவிலுக்கு விற்றுவிட்டாளோ என்று வருந்தித் தவித்தார்கள். ஆனால் ஏழை என்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் எதைச் செய்யவும் துணியவில்லை.

தன் குழந்தைக்காகப் பல விரதங்களும் நியமங்களும் செய்வதாகத் தீர்மானித்தாள் அச் சிறுமி. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அம்மனை பூஜித்து பக்தி சிரத்தையுடன் மனமுருக அவளிடம் தன் குழந்தை தன்னிடம் இல்லாவிட்டாலும் எங்கேயாவது சௌக்யமாக இருக்கட்டும் என்று ப்ரார்த்தித்தாள். அந்த வ்ரதத்தின் மகிமையை அடுத்த இதழில் படிப்போம். ✻




அசோகன் கூறும் விஷயங்களை யெல்லாம் நிதானித்து கேட்டுக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ரவீந்திரனின் மூளையில் பளிச்சென்று ஒரு மின் வெட்டு வெட்டியது. அம்மின்னல் ஜாதியின் வெளிச்சத்தில் அவரது கூரிய அறிவிற்கு சில விஷயங்கள் புலனாயின. அசோகனை ஒருமுறை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை நோக்கினார்.

'யானைக்கும் அடி சறுக்கும் என்பதுபோல் ஒரு வினாடி நாமும் ஏமாந்துவிட்டோமே' என்றெண்ணிய ரவீந்திரன், "மிஸ்டர் அசோக்! என்னை என்னவோ ஏமாற்றிவிட்டதாக, நானும் உங்கள் வாக்குமூலம் அனைத்திலும் மயங்கி நம்பிவிட்டதாக நீங்கள் சீக்கிரத்தில் எண்ணிவிட்டீர்கள். அப்படி நான் ஏமாறவில்லை" என்ற பீடிகையோடு பேச்சைத் தொடங்கினார்.

இன்ஸ்பெக்டரிடமிருந்து எதிர்பாராது வெளிப்பட்ட இச்சொற்கள் அசோகனை மின்சாரத்தால் தாக்குண்டவனைப்போல் செய்தது. "என்ன சார்! நான் உங்களை ஏமாற்றுகிறேனா? இதென்ன புதிர்போல் பேசுகிறீர்கள். விளங்கச் சொல்லுங்கள்."

"யோசித்துப் பாருங்கள் ஸார் நீங்களே. அப்போது கடையில் இரும்புப் பெட்டியைத் திறக்க உங்களிடம் சாவி கேட்டபோது, 'ஐயோ! எங்கே சாவி...காணவில்லையே' என்று பதறினீர்கள். இரும்புப் பெட்டியும் தொடும்போதே திறந்துகொண்டு விட்டதால், சாவியின் அவசியம் அப்போது ஏற்படவில்லை. ஆனால்... இப்போது சாவியைப் பற்றி விசாரணை நடத்தியபோது உடனே ஜேபியிலிருந்து சாவியை எடுத்துக் கொடுத்தீர்கள். என்னிடமா இந்த ஜேபடி வித்தையெல்லாம்? ஒருசமயம் காணாது மறைந்திருந்த சாவி, இப்போது திடீரென்று எங்கிருந்து முளைத்தது? நான் அப்போதே இதைப்பற்றி கேட்டிருப்பேன். ஆனால் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுகையில் நான் குறுக்கிட்டேனானால் அவ்விஷயம் தடைபட்டு, மேலே வெளிவராமல் நின்றுவிடும். அதனால்தான் நான் முழு விவரங்களும் அறிந்து

கொண்ட பிறகு கேட்கலாம் என்றிருந்தேன். உங்கள் வாயா லேயே இருவிதமாகப் பேசுகிறீர்களே?'' என்ருர் ரவீந்திரன்.

''சார்! நான் ஏமாற்றவும் இல்லை. ஏமாற்ற முயலவும் இல்லை. நான் சாவியை சட்டையின் உள்புறம் உள்ள ஜேபியில் தான் வைப்பேன். எதிர்பாராது போலீஸையும், நாயையும் கண்ட நான் பதட்டத்தில் மேல்ஜேபிகளிலேயே தேடினேன். அதற்குள் தானுகவே இரும்புப் பெட்டி திறந்துகொண்டதோடு, அதில் திருட்டுப்போன நகைகளையும் கண்ட பிறகு என் நிலையே எனக்குப் புரியாது போய்விட்டது. மற்றவர் யாராயிருந்தாலும் எதிர்பாராது ஏற்பட்ட இந்த அபாண்ட பழிக்கும், உணர்ச்சிக்கும், உயிரே நீங்கியிருக்கும். எனக்கு அப்படி எதுவும் நேராது நின்றதே ஆச்சரியம். அப்படிப்பட்ட அயோமய நிலையில் என்ன சார் தெரியும். நீங்களும் அப்போது இதுபற்றி மீண்டும் பேசவே, என் கைகள் வழக்கமாக உள்ஜேபியில் கைவிட்டதும் சாவி தடு பட்டது, கொடுத்தேன். பதட்டம் என்பது, எல்லோருக்கும் இயற்கையாய் உள்ள ஒரு பலவீனம்தானே'' என்று அசோகன் தன்மீதுள்ள சங்கை நீங்கும் வகையில் விவரித்துப் பதிலளித் தார்.

''எல்லாம் சரிதான் சார். அவரவர் தங்கள் மீதுள்ள குற்றங்களைத் தீர்க்க, சரியான வழியில் பேசுவர். அதுபோல் நீங்களும், சொல்கிறீர்கள். எங்களுக்கும் தீர விசாரித்து உங்கள் குற்றங்களை துப்புத்துலக்கி கண்டுபிடிப்பதுதான் வேலை. உங்கள் வாக்குமூலத்திலேயே தீர்மானித்துவிட மாட்டோம்'' என்று ரவீந்திரன் கூறிக்கொண்டிருக்கும்போது, வெளியில் யாரோ ஒருவர், இன்ஸ்பெக்டரையும், அசோகனையும் பார்க்க வந்திருப்பதாக பாரா செய்யும் சிப்பாய் வந்து உரைக்கவே, அப் பேச்சை அதோடு நிறுத்திவிட்டு, உள்ளே வரும்படி உத்திர விட்டார் இன்ஸ்பெக்டர்.

வந்தது பாலகோபால் — அதாவது அசோகனின் சிநேகிதன்.

வரும்போதே, ''அசோக்! இதென்ன அநியாயம்? உன்னையா குற்றவாளி என்கிருர்கள். உன் கையிலா விலங்கைப் பூட் கைதியாய் அழைத்து வந்திருக்கிருர்கள். அக்கிரமம்; உலகம் ஒப்புமா இந்த செய்கைக்கு? நம் கடையிலா நகைகள் இருந்தன. என் தலை சுழலுகிறதே. என்னுல் ஒன்றும் நம்பவே முடிய வில்லை'' என்று துயரம் தொனிக்க கூறிக்கொண்டே, இன்ஸ் பெக்டரின் கைகளைப் பற்றிக்கொண்டான்.

''இன்ஸ்பெக்டர் ஸார்! என் நண்பன் ஒருபோதும் அப்படி யெல்லாம் செய்திருக்கமாட்டான். நான் பூரண சாட்சி, அவன் மீதுள்ள குற்றத்தை அகற்றி, விடுதலை பெற நான் என்ன வேண்டுமானுலும் செய்யத் தயார். நீங்கள் எதையும் நம்பி விடாதீர்கள். கேஸை தீர துப்பறியுங்கள். மேலும், அசோக்கை

ஜாமீனில் விடுவிக்க என்ன செலவானாலும் சரி. நான் என்னையே அடமானம் வைத்தேனும் மீட்பேன். நாங்களிருவரும் ஓருயிர்-ஈருடல் போன்றவர்கள். அவன் துன்பப்பட நான் சகியேன். நீங்கள் தான் கதி'' என்று மூச்சிரைக்க இரைந்து பேசியதோடு, வருத்த மிகுதியால் வெளிப்பட்ட கண்ணீரையும் துடைத்துக் கொண்டான்.

அவனது பேச்சு, நடையுடை பாவனை எல்லாவற்றையும் ஒரு கண்ணோட்டம் விட்டு மனதிற்குள் குறிப்பெடுத்துக்கொண்ட ரவீந்திரன், "சார்! காரணமில்லாது நாங்கள் கைது செய்ய மாட்டோம். சட்டப்படி நாங்கள் தீர விசாரித்து, அதன்படி செய்வோம். உங்கள் நண்பர் என்ற ப்ரியத்தில் நீங்கள் படபடக்கிறீர்கள். மேலும், ஜாமீனில் விடுவது என்பது இப்போது முடியாத காரியம். நான் ஒருவன் எதையும் செய்துவிட முடியாது. எனக்கும் மேலுள்ள அதிகாரிகள் வந்து விசாரித்து, அதற்கு மேல் அவர்களிடும் உத்திரவின்படியே எல்லாம் நடக்கும். சரி...நீங்கள் இன்னும் ஏதாவது பேச வேண்டுமானால் சீக்கிரம் பேசி முடியுங்கள்; நேரமாகிறது.

" அசோக்! நீ எதற்கும் கவலைப்பட்டு மனதைத் தளர விடாதே. நான் எப்படியும் என்னால் முடிந்தவரை நம் நண்பர்கள் துணையில் செய்கிறேன். உன் சிநேகிதர்களெல்லாம் விட்டுக் கொடுத்துவிடமாட்டார்கள்.'' என்று கூறிய பாலகோபால் விடைபெற எழுந்தான்.

"பாலகோபால்! என் வீட்டிற்கு சென்று அவர்களிடம் 'கவலைப்பட வேண்டாம். ஆண்டவன் துணையிருக்கிறான்.' என்று நான் சொன்னதாகச் சொல்லவும். மேலும் அவர்கள் யாரும் இங்கு வரவேண்டாம், என்று சொல். நான் வெளியில் வரும் வரை, நீதான் என் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று அசோக் கூறி விடையும் கொடுத்தான். பாலகோபால் புறப்பட்டுச் சென்றதும் சங்கரன் போலீஸ் ஸ்டேஷனின் வாயிலில் வந்திறங்கினர்.

ஆனால், அவர் உள்ளே ப்ரவேசிக்காமல் வெளி வராந்தாவிலேயே நின்றிருந்து, இன்ஸ்பெக்டருக்குச் செய்தியனுப்பினர். சிறிது நேரங்கழித்து வெளிப்பட்ட இன்ஸ்பெக்டர், வாயைத் திறக்காது, தன் புருவங்களை உயர்த்தியே, என்ன? என்று வினவினர்.

"சார்! நான் உங்களுடன் தனிமையாகச் சில அந்தரங்க விஷயங்களைப் பேசவேண்டும். இங்கேயே ஏதாவது தனி இடத்தில் பேசலாமா? அல்லது, உங்கள் சௌகரியம் எப்படியோ அதைத் தெரிவியுங்கள்'' என்றார் சங்கரன்.

"நீங்கள் பேசப்போகும் விஷயம் என்னவாக இருக்கும் என்பதையும் ஊகிக்கிறேன். சற்று இப்படி அமருங்கள்; வருகி

றேன்" என்ற ரவீந்திரன், அசோகனுக்குத் தகுந்த காவல் வைத்துவிட்டு, மேலே சிலருக்குப் போன் செய்துவிட்டு ஒரு தனியிடத்தில் போய் அமர்ந்து, அங்கு சங்கரனை வரவழைத்தார்.

"சார்! நீங்கள் என்னவோ அனுஷாவைச் சந்தேகப்படுகிறீர்களாம். அந்தப் பெண் நீங்கள் வந்ததிலிருந்து எழுந்திருக்கவேயில்லை. அவள் ஒருகாலும் அப்படி செய்யமாட்டாள். எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. இந்த கேஸினால் அவள் வாழ்க்கை பாழாவதானால், கேஸையே அமுக்கிவிட நான் தயார். நான் பெற்ற குழந்தை மாதிரி அவள்".

"பொறுங்கள் மிஸ்டர் சங்கரன்! நீங்கள் நம்புகிறீர்கள். அவளும் செய்யவில்லை என்றே வைத்துக்கொள்வோம். அப்படியானால்...அவள் கைக்குட்டையில் ஏன் உங்கள் பணம் இருக்கிறது. நீங்களே கூறுங்கள். யாரைச் சந்தேகிக்கத் தோன்றுகிறது?"

"கைக்குட்டையிலிருந்தே அவள்தான் குற்றவாளி எனத் தீர்மானித்துவிடலாமா?..."

" அவளே... இது என்னுடையதுதான் என்று கூறிவிட்டாளே?..."

"கைக்குட்டை அவளுடையது என்று ஒப்புக்கொண்டுவிட்டாளே தவிர...அந்த கைக்குட்டை அங்கு எப்படி வந்தது... என்றும் தெரியாது...நான் நிரபராதி...என்றும் கூறுகிறாளே சார்...அதையும் கவனிக்க வேண்டாமா?" என்று கூறி நிறுத்தினார் சங்கரன். சிறிது நேரம் அவ்விடத்தில் மௌனம் நிலவியது.

திடீரென்று சங்கரன் மௌனத்தைக் கிழித்தவாறு பெருங்குரலில், "சார்...! ஒரு புதிய ஆதாரம். திடீரென்று தோன்றியது. நேற்று மாலை வண்ணான் துணிகளைக் கொண்டு வந்திருந்தான். அப்போது அனுஷாவும், அவள் தாயார், என் மனைவி மூவரும் சினிமாவிற்குப் போயிருந்தனர். 'அனுஷாவிற்கும் எங்களுக்கும் ஒரே வண்ணானகையால், அவன் கொண்டுவந்திருந்த அனுஷா துணியையும் நானே எங்களுடையதோடு வாங்கி வைத்தேன். இரவு அவர்கள் திரும்பிவந்த பிறகு, கூற மறந்துவிட்டேன். ஒரு வேளை இது வண்ணான் கொண்டுவந்த கைக்குட்டையாயிருக்குமோ?' என்ற சந்தேகம் தோன்றுகிறது. சே! அனுஷாவுடன் பேசும்போதுகூட இந்த எண்ணம் எனக்கு எழவில்லையே." என்றார்.

"ஹூம்...அப்படியானால் வண்ணான் ஜாபிதாவையும், வந்திருக்கும் துணிகளையும் கணக்கெடுத்துவிட்டால் எல்லாம் புரியும்...நானே உங்கள் வீட்டிற்குச் சில விஷயங்கள் பற்றி விசாரிக்க வருவதாக இருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள். சரி... இதைப் பரிசோதிக்கவும்...மேலுமுள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளவும் இப்போதே புறப்படுகிறேன்." என்று கூறிக்கொண்டே சங்கரன் பின்தொடர ரவீந்திரன் புறப்பட்டார்.

❋

# நான்கு

## அதிசய துப்பும் அணங்கின் நட்பும்

“வாருங்கள் சார்! ஒதுக்குப்புறமான இந்த அறையில் உட்காருவோம்” என்று வரவேற்று இன்ஸ்பெக்டரை அமரச் செய்தார் சங்கரன்.

“அனுஷா!...அனுஷா!” என்று குரல் கொடுத்தார். சில நிமிடங்கள் கழிந்த பிறகே அவள் அவ்வறையில் ப்ரவேசித்து, ஆனால் கதவருகிலேயே ஒதுங்கி நின்ருள்.

‘என்ன தாத்தா?’ என்று கேட்கவும் முடியாது, தலை நிமிர்ந்து நோக்கவும் முடியாது, கண்ணீர் பெருக நின்றிருந்தாள். துக்கத்தால் அவள் உடல் துவண்டு, நடுங்கிக் கொண்டிருந்தது. பார்த்தவர் மனதைக் கரைக்கும் வண்ணமிருந்த அவள் நிலை கல்நெஞ்சம் படைத்த போலீஸ் அதிகாரியான இன்ஸ்பெக்டர் ரவீந்திரன் நெஞ்சையும் நெகிழவைத்தது.

“சார்!...அப்போது அந்த வண்ணன் ஜாபிதாவை எடுத்து வருகிறீர்களா?” என்று ரவீந்திரன் நினைவூட்டவே சங்கரன் எழுந்தார். “அனுஷா! உன்னுடைய வண்ணன் ஜாபிதாவைக் கொண்டுவா. நேற்று மாலை துணிகள் வந்தது. அதைக் கூறவே மறந்துவிட்டேன். சரிபார்க்க வேண்டும்” என்ருர்.

சங்கரன் எழுந்ததும் கூடவே ரவீந்திரனும் பின்தொடர்ந்தார். சார்! உங்கள் வீட்டு ஜாபிதாவை எடுக்க மேலேதானே போகவேண்டும். மேலும் துணிகளும் அங்குத்தான் இருக்கிறதல்லவா? நானும் வந்து ஒரேயடியாக சரிபார்த்து விடுகிறேன்” என்ருர்.

சங்கரன் துணிகளை முதலில் சரிபார்த்த ரவீந்திரன், அனுஷாவின் ஜாபிதாவைக் கையிலெடுத்தார். அதில் ஒருகைக்குட்டையும் எழுதப்பட்டிருந்தது. ஆனல்...துணிகளைக் கணக்கு பார்த்ததில் அந்த கைக்குட்டை காணவில்லை. அதிலிருந்து அந்தக் கைக்குட்டைதான் வண்ணனுக்குப் போட்ட துணி ஜாபிதாவில்உள்ள கைக்குட்டை, வந்திருந்த துணிகளில் காணப்படவில்லை. அதோடு அனுஷாவின் கைக்குட்டையில் பணம் அகப்பட்டிருப்பதால், சுலபமாக அதே துணிதான் இது எனத் தீர்மானித்து விடலாம். ஆனல்...இதை உடனே ஒப்புக்கொள்ள ரவீந்திரனின் போலீஸ் உள்ளம் இடம் தரவில்லை. ஒருவேளை வண்ணனே அந்த கைக்குட்டையைச் சலவை செய்து கொண்டு வந்தானே...அது விட்டுப் போய்விட்டதோ...அப்படியிருந்தால் இது வேறு கைக்குட்டைதானே?...’ என்றெல்லாம் அந்த இன்ஸ்பெக்டரின் மூளை சந்தேகத்தின்பேரில் கோணல் வழியில் சென்று யோசித்தது.

உடனே, “சார்! உங்கள் வீட்டு வண்ணனைச் சற்று வரவழைக்க முடியுமா? அவன் வரும்போது துணிகள் சலவை

செய்து அனுப்பிய ஜாபிதாவையும் கொண்டுவர வேண்டும். ஆனால் எதற்காக என்றோ, நான் இங்கிருக்கிறேன் என்றோ, எந்தக் காரணமும் தெரிவிக்காமல் வரச்சொல்லுங்கள்'' என்றார்.

சங்கரனும் அவனுக்கு ஆள் அனுப்பினார்.

ஒதுங்கி நின்றிருந்த அனுஷாவிற்கு ஒன்றுமே விளங்காது இருந்தது. "தாத்தாவுடன் வந்த இந்த இன்ஸ்பெக்டர், வண்ணான் ஜாபிதா கொண்டுவா என்றார். ஏதோ துணிகளைப் புரட்டிப் பார்த்தார். ஆனால், மேலே ஒன்றும் பேசாது வண்ணானுக்கு ஆளனுப்பியுள்ளார். இவர் செய்கையெல்லாம் புரியாத புதிராகவல்லவோ இருக்கிறது. என்னைச் சந்தேகித்த மாதிரி நம் வீட்டு வண்ணானை இருப்பதால் அந்த அப்பாவியையும் ஏதாவது போட்டுக் குழப்புவாரா?'' என்றெல்லாம் எண்ணி உண்மை விஷயத்தைப் புரிந்துகொள்ள தன்னைத்தானே குழப்பிக்கொண்டாள்.

அதற்குள்ளேயே போன ஆள் வண்ணானுடன் திரும்பினான். "வா அப்பா! நீதான் சலவைசெய்பவனா? நேற்று நீயா துணிகளை இந்த வீட்டிற்குக் கொண்டுவந்தாய்?'' என்று ரவீந்திரன் எடுத்த எடுப்பிலேயே கேள்விகளைக் கேட்டு, வண்ணானை வரவேற்றார்.

'ஆம்...' என்று தலையாட்டிய அவனது உடலெல்லாம் நடுங்கத் தொடங்கியது. 'இதுவரை ஒருநாள்கூட சங்கரன் துணி கொண்டு வைத்தபிறகு அழைத்ததில்லை. இன்று அதிசயமாகக் கூப்பிடுகிறாரே' என்று நினைத்து வந்த வண்ணானுக்கு, சங்கரன் பக்கத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருப்பதோடு, அவரே தன்னை ஏன் வரும்போதே கூப்பிட்டுப் பலகேள்விகள் கேட்கவேண்டும்? என்ற பயம் அவனை ஆட்டியது.

"ஏனப்பா! இங்கிருந்து சலவைக்கு எடுத்துபோன துணி முழுவதும் ஒன்று பாக்கிவிடாமல் திருப்பிவிட்டாயா? அல்லது ஏதாவது பாக்கியிருக்கிறதா?'' என்றார் ரவீந்திரன்.


"இல்லீங்க...எல்லாந் திருப்பிட்டேனுங்க...ஐயாவுது கீழ் வீட்டு அம்மாவுது எல்லாங்க...'' என்று கூறுவதற்குள் அவனுக்கு மூச்சு இறைத்தது.

"எங்கே...அந்த ஜாபிதா கொண்டு வந்திருக்கிறாயா... கொடு...''

"இந்தாங்க...இந்த நோட்டுப்புத்தகத்திலேதான் எழுதி வெச்சு...ஐயாகிட்ட கையெழுத்துகூட வாங்கியிருக்கேனுங்க. இதோ பாருங்க...''

அதைப் பார்த்து எஞ்சியிருந்த தன் சந்தேகத்தையும் பூர்த்தி செய்துகொண்ட இன்ஸ்பெக்டர் "சரி...எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது'' என்று கூறியவாறே அப்புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

"இதைப் பாருங்க ஐயா...ஒருத்தர்வீட்டு துணியைத் திருடி எனக்கு என்ன ஆவணும்? பரம்பரையா இந்த தொழில் செய்து கிட்டு வர நாங்க ஒருநாளும் இந்த ஈனச் செயல் செஞ்சதில்லே" என்று கொஞ்சம் தைரியம் எழும்பவே தனது பெருமையையும் கூறிக்கொண்டான்.




வண்ணனை அனுப்பிவிட்டு மீண்டும் பேச்சைத் தொடங்கி னர்.

"சார் இப்போது உங்கள் சந்தேகங்கள் தீர்ந்து ஏதாவது உண்மை புலனுகிவிட்டதல்லவா?" என்று கேட்டார் சங்கரன்.

"ஊம்...உம்..." என்ற ரவிந்திரன், அனுஷாவின் பக்கம் திரும்பி, "என்னம்மா...ஒரு விஷயம்...காலையில் நான் தனியாகக் கூப்பிட்டு விசாரித்தபோது...ஒரு நடன ஆட்டத்திற்குப்போயிருந்தேன்...அங்கு அவள்...அவள்பெயர்...என்றெல்லாம் ஏதோ உளறி பாதியில் நிறுத்தி விட்டாயே... அது என்ன... ஏன் அப்படிக் கூறினுய்?" சங்கரன் அவர்களுக்கு இந்த விஷயமெல்லாம் தெரிந்திருப்பதால் அவர் எதிரிலேயே கேட்கிறேன்" என்றுர்.

"ஓ... அதுவா...ஒரு நடன ஆட்டத்திற்குப் போயிருந்தேன். ஆட்டம் முடிந்து திரும்பும்போது கூட்டம் நெக்கரித்தது. அப்போது என் சினேகிதி ஒருத்தி வேகமாக வந்ததால், இரும்பு நாற்காலி காலில்பட்டு ரத்தம் வந்துவிட்டது. அருகிலிருந்த நான் என் கைக்குட்டையை அவள் காயத்திற்குக் கட்டினேன். எதிர்பாராது நீங்கள் கேட்டகேள்வி என்னைப் பலமாகத் தாக்கி, 'ஒருவேளை அந்தக்கைக்குட்டைதானே' என அர்த்தமில்லாது சந்தேகிக்கச் செய்தது. ஆனல், உடனேயே, 'என்ன முட்டாள்தனம், அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?' என என்மனமே கூறவே, ஏதோஉளறிப் பாதியில் நிறுத்திவிட்டேன் வேறென்றுமில்லை" என ஒரு கதைபோல் கிடுகிடுவெனக் கூறி முடித்தாள்.

இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். 'அந்த சமயத்தில் தான் தப்பித்துக் கொள்வதற்காக, வேகத்தில் ஏதோ உளறியிருக்கிருள். எந்த வழியிலும் தவறு இல்லாத இந்தப் பெண்ணை எத்தனை சந்தேகித்து விட்டோம்.' என எண்ணினுர்.

"மிஸ்டர் சங்கரன்! உங்களுக்குத்தான் நான் ப்ரத்யேக நன்றி செலுத்த வேண்டும். எனக்குத் தோன்றுத யோசனை தங்களுக்குத் தோன்றவே இப்பெண்ணின்மீது ஏற்பட்ட குற்றம் சிக்கலின்றி விலகி விட்டது. கடைசியில் வண்ணன் கொண்டுவந்த சலவைத் துணிகளில் மேலாக இருந்த இக்கைக்குட்டையை, வந்த திருடன் பணம்முடிக்க எடுத்திருக்கிருன். போகும் வேகத்தில், அது விழுந்து, நமக்குத் துப்புதுலக்க உதவியிருக்கிறது" என்றவாறே இன்ஸ்பெக்டர், தன் குறிப்புப்புத்தகத்தை எடுத்து ஏதோ எழுதத் தொடங்கினுர்.

ரவிந்திரனின் வாயிலிருந்து வெளிப்பட்ட இந்த இனிமையான சொற்கள் அனுஷாவை அப்படியே அமுத வெள்ளத்தில் ஆழ்த்தியதுபோல் குளிரச் செய்தது. சங்கரன் நிலை தெரியாது குதிக்கவே தொடங்கிவிட்டார்.

"சார்! நீங்கள்தான் எங்கள் அனுஷாவின் மானத்தைக் காப்பாற்றி, உண்மையைக் கண்டுபிடித்த தெய்வம். அனுஷாவின் குணம் மங்காத சூரியஒளி என்பதை நிதர்சனமாகக் காண

சரியான சந்தர்ப்பமே தவிர, இதை விதி, போராதவேளை என்று முதலில் எண்ணியது தவறு என்றே என் மனதில் தோன்றுகிறது'' என ஆனந்தக் கூத்தாடினர்.

அதற்குள் வாயில் புறத்திலிருந்து "அனுஷா!'' என்று ஒரு பெண்குரல் ரீங்காரமிட்டது. அனுஷா மகிழ்ச்சியின் தெம்பில் உற்சாகத்தோடு ஓடினாள்.

அவள் சிநேகிதை ரோகிணி வாயில் வராந்தாவில் கம்பத்தைப் பிடித்தவாறு நின்றிருந்தாள். (தொடரும்)

---



# கர்பனை விமர்சகர்

— உண்மை விளம்பி —

அன்று மைசூரின் பிரபல ராமகான சங்கீத சபையில் புகழ்பெற்ற இளம் வித்வான் ஸ்ரீமான் ஸ்ரீ காந்த் M. Sc. அவர்களின் வயலின், பிரபல சங்கீத சிரோமணி அபிராம சுந்தரய்யரின் வாய்பாட்டுக்கு பக்கவாத்தியமாக அமைந்திருந்தது. நான் மைசூருக்கே புதிதானவள். அன்று காலையில்தான் நான் அந்த ஊருக்கு வந்திருந்தேன். என்னை அச் சபையின் காரியதரிசி மேடை அருகே சென்று உட்கார வைத்தார். எனக்கு அங்கு உட்கார்ந்திருந்த பெண்மணிகள் யாவரும் அறிமுகமில்லாத முகங்களா இருந்தன. மேலும் அவர்கள் பேசிய கன்னட பாஷையும் எனக்குப் புரியவில்லை. சற்று நேரத்தில் பாடகரும், பக்கவாத்தியக்காரர்களும் மேடையின் மீது வந்தமர்ந்தனர். வயலின் வித்துவான் தற்கால நாகரீகத்திற்கேற்ப பட்டதாரி. மேலும் சென்னையில் பிரபல கலாசாலையில் புரபொசராகப் பணியாற்றுபவர். இளம் வயதுடன் கூடிய கம்பீரமான தோற்றம், நிறைந்த வித்தை, இவையெல்லாம் ரசிகர்களின் மனத்தை நொடியில் மயக்கச் செய்துவிட்டது. பாடகரின் கற்பனைக்கேற்ப தன் மனோ தர்மத்திற்கேற்ப அவர் வாசித்த நடை ஜனங்களுக்கு மனசந்தோஷத்தை அளித்துக் கொண்டிருந்தது. கச்சேரி ஆரம்பித்த சில மணிகளில் என் அருகே இரு நவநாரீக யுவதிகளும் அவ்விருவர்களின் தாயாரும் வந்து அமர்ந்து கொண்டனர். பெண்களுக்கே உரித்தான அரட்டை கச்சேரியுடன் சங்கீத கச்சேரியை கேட்க ஆரம்பித்தனர்.

இதில் சுவாரசியமான விஷயம் அவர்கள் சம்பாஷணை எனக்குத் தெரிந்த தமிழுடன் கூடிய ஆங்கிலத்தில் இருந்ததுதான். அவ்விருவருள் தற்காலிக நாகரிகமான குதிரை வால் கொண்டை கட்டியிருந்தவள் அரட்டை கச்சேரிக்குத் தலைமை வகித்தாள் "மிஸ் நளினி. 'இன்று பிஸிக்ஸ் லாப்பில் நம் லெக்சரர் மிஸ் கொத்தவரக்காய் என்னை என்ன பாடுபட வைத்தது. இன்று நான் இங்கு வரும்போது என் தாயாருடன் என்னைப் பார்த்து "ஹலோ சுனோ! ஹவ் டூ யூடு" என்றுவிசாரிக்கிறது சனியன்" என்று தன்குருவுக்கு சிஷ்யைக்குரிய மரியாதையைத் தெரிவித்தாள். மேலும் இளம் வயலின் வித்துவானைப் பற்றி விமர்சிக்க ஆரம்பித்தாள். நளி இந்தவயலினிஸ்ட் பட்டதாரி, அழகு வாய்ந்தவர். மேலும் மணமாகி 4 வருடங்கள் ஆனவராம். ஒரு குழந்தைக்குத் தந்தையானவராம். ஆனால் இவ்வளவு இருந்து என்ன பயன்? தனியாக தன் தாயுடன் இருக்கிறாராம். நான் அந்த மனைவியாக இருந்தால், டைவர்ஸ் செய்துவிட்டு நியூஸ் பேப்பரில் விளம்பரப் படுத்தி இருப்பேன்' என்று உக்ரமாகக் கூறினாள். அதற்குள் நளினி என்கிற பிரி

மணை கொண்டைக்காரி "ஆமாம் சுனேதா! நான்கூட கேள்விப்பட்டேன். அவருக்கு தன் மனைவி ஒரு பட்டதாரி இல்லை என்ற குறைக்காக அவளுடன் வாழவில்லையாம. என்ன அநியாயம்! என்ன தான் கலா தேவியை ஆராதனை செய்தாலும் தன் தேவியை வைத்துக் கொள்ள தெரியவில்லை பார்த்தாயா?" என்று காரசாரமாக வாதம் செய்தாள்.

இதனிடையில் பாடகர் பாடிய தானத்திற்கு வயலின்காரருக்கு தனி சான்ஸ் கிடைத்தது. இவர் வாசிப்பதில் இருக்கும் குழைவும், உருக்கமும் நிஜ வாழ்க்கையில் இல்லையே என்று பொருமினாள் மிஸ் குதிரை வால் கொண்டை.

எனக்கு உள்ளூர ஓர் ஆசை எழுந்தது: 'நீங்கள் ஏதாவது பத்திரிகையின் விமர்சக வேலையிலிருப்பவர்களா?' என்று கேட்க வேண்டும் என்றிருந்தது. ஆனால் இக் கேள்வி வாய் வரை வரவில்லை. மனத்திற்குள்ளே அடங்கிவிட்டது.

கச்சேரி இனிது முடிவடைந்தது. மங்களம் பாடி முடிப்பதற்குள் சபா காரியதரிசி என் குழந்தையை என்னிடம் கொடுத்து விட்டு "தங்கள் கணவர் தங்களைத் தயாராக இருக்க சொன்னார்கள். ரயிலுக்கு நாழிகையாகி விட்டதாம்" என்று என்னை வாசலில் காத்துக் கொண்டிருந்த டாக்ஸி அருகே அழைத்து சென்றார்.

கடைசியாக ஒரு விஷயம்: அன்று நடந்த அந்த சமாசாரத்தை என் கணவரிடம் நான் ஒன்று விடாமல் கூறினேன்.

அதற்கு அவர் "பார்த்தாயா நீ என்னுடன் கச்சேரிகளுக்கு வர வெட்கப்படுவதால் நான் படவேண்டிய அவஸ்தையை. ம்...ம்... நான் உன் சொந்த அம்மாஞ்சி என்றும், நம் இருவரின் அந்தரங்க ஆசை நம் கல்லூரி நட்களுக்குப் பின் திருமணமாக நிறைவேறியது என்றும் அவ்விரு ரசிக பெண்களுக்கு தெரியவில்லை. அதுசரி நீ எப்படிப் இதை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தாய்!" என்றுகூறி நகைத்தார்.

ஆம்! வயலின் வித்வான் ஸ்ரீ காந்த் M. Sc. அவர்களின் மனைவி நான்தான். அவர்கள் கற்பனை விமர்சக உலகில், எங்கள் நிஜ வாழ்க்கையில் ஆசை அத்தானை அன்பு கணவராகக் கொண்ட, ரசிகர்களுக்கு அறிமுகப் படுத்தப்படாத, கற்பனையில் அதிர்ஷ்ட ஹீனி என்று பெயரெடுத்தவள்.

இதை நினைக்க எனக்கு அடக்கமுடியாத சிரிப்புத்தான் வருகிறது. என்ன செய்வது. மனம் ஒரு குரங்குக்குச் சமம் என்று கூறிய மகானின் சொல் நிறைவே இப்படிச் சில பிரக்ருதிகள் இருந்தால்தானே முடியும்.

---

## மதிப்பு

கணவன்: வர...வர இந்த வீட்டிலே நான் ஒருவருக்கும் மதிப்பில்லை. சமையல்காரனைவிட கேவலமாய்இருக்கிறேன்.

மனைவி: சூ...மெள்ள பேசுங்கள். அவன் காதிலே விழபோகிறது. நான் இருக்கும் இருப்பில் அவன் தயவு இல்லாவிட்டால் சோறு மண்ணுதான்.

கணவன்: ......?

# லக்னோ அரசாங்கப் பொருட்காட்சிச்சாலை

---

உத்தரப் பிரதேசத்தில் லக்னோவிலுள்ள அரசாங்கப் பொருட்காட்சிச் சாலையானது 1863-ம் வருஷத்தில் நகரசபை ஸ்தாபனமாக ஏற்படுத்தப்பட்டது. அது புராதன கலைநுட்பப் பொருள்கள் இடம்பெற்றுள்ள மிகப்பழமையானதொரு பொருட் காட்சிச்சாலையாகும்.

அது பூரண வளர்ச்சிபெற அரசாங்கப் பொருட்காட்சிச் சாலையாக அபிவிருத்தியடைவதற்கு 20 வருஷ காலம் பிடித்தது. பாரசீக; முகலாய, ராஜஸ்தானிய, பஹாடிய, அவத் வர்ணச் சித்திரங்களும், இடைக்காலச் சிற்பங்களும், அந்த ராஜ்யத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சரித்திர காலத்துக்கு முற்பட்ட பொருள்களும் அங்கே காட்சியில் வைக் பட்டுள்ளன.

அப்பொருட்காட்சிச்சாலை மொத்தம் எட்டுப் பிரிவுகள் அடங்கியதாகும்; தொன்மை முக்கியத்துவப் பொருள்கள், பழங் கால நாணயங்கள், இயற்கை சாஸ்திரம், மனித இன வரலாறு, வர்ண ஓவியங்கள், ஜவுளிகள், சரித்திர காலத்துக்கு முற்பட்ட பொருள்கள், ஆயுத தளவாடங்கள் ஆகிய எட்டுப் பிரிவுகள் இருக்கின்றன. அப்பொருட்காட்சிச்சாலை இரண்டு கட்டடங் களில் அமைந்திருக்கிறது. அவைகளில் ஒரு கட்டடம் நவாப் ஸதாத் அலிகானால் கட்டப்பட்டதாகும். அங்குள்ள தொல் பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களில் ஜைன, புத்த, ஹிந்துமதச் சிற்பங்கள் அடங்கியுள்ளன; அவை கி. மு. 3-வது நூற்றுண்டிலிருந்து கி. பி. 15-வது நூற்றுண்டு வரையுள்ள காலத்தைச் சேர்ந்தவையாகும்.

வர்ண ஓவியப் பிரிவில் கி. பி. 15-வது நூற்றுண்டிலிருந்து 19-வது நூற்றுண்டின் மத்திக்காலம் வரையுள்ள காலத்தைச் சேர்ந்த குட்டிச் சித்திரங்களும் சித்திர வேலைப்பாடமைந்த கை யெழுத்துப் பிரதிகளும் இடம் பெற்றுள்ளன. மேவார், காஷ்மீர், இந்திய - துருக்கி, காங்ரா ஆகிய பாணிகளைச் சேர்ந்த கலை ஓவியங்கள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அங்கேயுள்ள நாணயப்பிரிவு மிகவும் குறிப்பிடத்தக்கதொன் ருகும். மிகப் புராதன கால அபூர்வ நாணயங்களும் அங்கே இருக்கின்றன. சரித்திர காலத்துக்கு முற்பட்ட பொருள்கள் உள்ள பிரிவில் பழங்காலக் கல் கருவிகளும், மொஹஞ்சதாரோ நாகரிகப் பொருள்களும், முக்கியமான செம்பு உளிகளும் காட்சி யில் வைக்கப்பட்டுள்ளன.

இதர பிரிவுகளில் பழங்கால மிருகங்கள், பறவைகள், பாம்பு கள், பூர்வ குடிமக்களின் ஆடையாபரணங்கள், கைவேலைப் பொருள்கள் முதலியவை அடங்கியுள்ளன.

(தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்)

# குளிர்ந்த நெஞ்சம்

வைமுகோ

115-வது நாவல்

## 7

### நினைப்பதும் நடப்பதும்.

ராதாவுக்கு பெரியடாக்டர் என்னவிஷயத்திற்காகக் கூப்பிடுகிறாளோ என்ற பதைப்பை விட அக் கடிதத்தில் என்ன இருக்கிறதோ என்கிற துடிதுடிப்பு அதி வேகமாக இருந்தது. “ப்ரேமா! அக்கடிதத்தைப் பார்த்துவிட்டு வருகிறேன். பெரிய டாக்டரிடம் போய் நான் பின்னாலேயே வருவதாகச் சொல்லு. இன்று முக்கியமான விஷயம் இப்பொழுது நான் என் தாயாரிடம் சொல்லிய எந்த விஷயத்தையும் நீ பிறரிடம் சத்தியமாக வெளியிடக் கூடாது. உன்னிடத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. இருந்தாலும் என் கடமைப்படி நான் சொல்லி வைத்தேன்” என்று கூறி ப்ரேமாவை அனுப்பிவிட்டு உள்ளம் துடிதுடிக்க, உடல் படபடக்க அக்கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

மதிப்பிற்குரிய டாக்டருக்கு வணக்கம்.

தங்களுடைய இன்றைய த்யாக செயலைக் கேட்டு எங்களுடைய குடும்பமே, ஏன் ஊரே வியப்புக்கடலாடுகின்றதென்றால் மிகையாகாது. தனக்கென கொடுத்த பொருளை இத்தகைய தான தர்மம் செய்த பெருமையை இதுவரையில் இந்த ஆஸ்பத்ரியில் யாருமே அடைந்ததில்லை என்று இந்த ஆஸ்பத்ரியின் பரம்பரையைச் சேர்ந்தவரும், எனது ஆப்த நண்பருமான ஷண்முகம் கூறி வியக்கிறார். இத்தகைய உத்தமமான காரியத்தை உலகறியச் செய்யவேண்டுவது பொதுமக்களின் கடமையாதலால் இந்த அத்புதமான விஷயத்தை ப்ரபல பத்ரிகைகளில் போடுவதற்கான ஏற்பாடுகளை நாங்கள்செய்திருப்பதோடு உங்கள் ஆஸ்பத்ரியின் அனாதை நிலையத்திற்கு இதோடு 5-ஆயிரம் ரூபாய் செக் வைத்திருக்கிறோம். இதை உங்கள் இஷ்டப்படி நிலையத்திற்கு உதவலாம். இதைப்பற்றிப் பாராட்டிப் பேசுவதற்கே நான் எனது நண்பன் வீட்டில் தங்களைச் சந்திக்கவந்தேன், ஆனால்?

நாளை தினம் என் தாயாரும், சகோதரியும் தங்கள் வீட்டிற்கு வருவதாகத் தீர்மானித்திருப்பதால் அதை முன்கூட்டித் தெரிவிக்கும்படி அம்மா எழுதச் சொன்னார்கள். தங்கள் தாயாருக்கு என் நமஸ்காரம்......

இதற்குமேல் ராதாவால் படிக்கப்பொறுமையே உண்டாகவில்லை. வெறுப்பும் எரிச்சலும் அவளுடைய தேகம் பூராவும் பரவிக் கொழுந்துவிட்டு எரிவதுபோல் இருந்ததால் அக்கடிதத்தையும் செக்கையும் ஒருமுறை பார்த்தாள். தன்னைப் பெரிய டாக்டர் கூப்பிட்டதைக்கூட மறந்துபோய்க் கவலையில் தோய்ந்து இடிந்த மனத்துடன் உட்கார்ந்துவிட்டாள். மறுபடியும் எதையோ நினைத்தவளாய் ஒரு துண்டு கடிதத்தில்....

'விளம்பரத்தை வெறுப்பவர்களுக்கு எத்தகைய உதவியும் தேவையில்லை. விளம்பரம் கண்டால் விபரீதம் நேரும்!'

ராதா.

என்ற வரிகளை மட்டும் எழுதித் தன் வேலைக்காரனிடம் கொடுத்து விலாஸம் கூறி அங்கு கொடுத்துவரும்படி அனுப்பிவிட்டுத் தனக்கு வந்த கடிதத்தையும் சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டபோது அவள் இதயத்தையழுத்தும் பெரும் சுமை ஏதோ ஒன்று சிறிது குறைந்ததுபோல் தோன்றியது. அதே சமயம் பெரிய டாக்டர் தன்னை நோக்கி வருவது கண்டு திடுக்கிட்டாள்.

மிகப் பெருமையும் கண்ணியமும் வாய்ந்த பெரிய டாக்டர் மாதுரிதேவி தன்னையழைத்தும் தான் போகாததால் தன்னைத் தேடிக்கொண்டு வந்துவிட்டதால் கட்டாயம் ஏதோ மகத்தான விஷயமிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இப்படி வருவார்களா! ஒருவேளை இந்த அயோக்யன் அவர்களையும் பார்த்துப் பேசியோ, கடித மூலம் தெரிவித்தோ இருப்பானே?....ஒன்றும் புரியவில்லையே! இத்தனைக்கும் காரணம் என் தாயாரின் மட்டித்தனமல்லவா முன்நிற்கிறது....என்று தனக்குள் எண்ணிக் குழம்பியவாறு தானே எதிர் சென்று மாதுரியை வரவேற்கும் முறையில் "மன்னிக்கவேணும் டாக்டர்! நான் உடனே வர நினைத்தும் என் குடும்ப விஷயமான சொந்த சமாச்சாரம் குறுக்கிட்டுப் பாதித்ததால் தாமதமாகிவிட்டது" என்று கூறி முடிக்கும் முன்பு மாதுரிதேவி சிரித்துக்கொண்டே.... "இதற்கா இத்தனை பெரிய மன்னிப்புக் கேட்கவேண்டும். அவஸரமான ஜோலி ஏதாவதிருந்திருக்கும்; அதனால்தான்

வரவில்லை என்பதை நானே உணர்ந்துதான் வந்தேன்'' என்று வினயமாகக் கூறி ஆஸனத்திலமர்ந்தாள்.

ஏற்கெனவே பயந்து நடுங்கும் ராதாவுக்கு இன்னும் என்னென்ன விபரீத விஷயங்கள் கொண்டுவந்துவிட்டாரோ என்கிற பதைப்புடன் பேசத் தொடங்கி....நிரம்ப சந்தோஷம் டாக்டர்! என்ன விஷயம்? என்று கேட்டாள்....

மாதுரி: வெகு நல்ல விசேஷம்தான் ராதா! ஆனல் அந்த விஷயம் உனக்குப் பிடிக்காதோ! அதுதான் தெரியவில்லை. ரத்னபுரி ஆஸ்பத்ரிக்கு ஒரு டாக்டர் வெகு அவசரமாக வேண்டுமாம். அங்கிருந்த டாக்டருக்கு ஏதோ உடல்நிலை சரியில்லாததால் நாளையே அவளை விடுதலை செய்துவிட்டு இங்கிருந்து ஒருவரை அனுப்ப வேண்டும் என்று அர்ஜெண்டு தந்தி வந்திருக்கிறது. முதலில் பூஷணத்தை அனுப்பலாம் என்று நினைத்தேன். எதற்கும் உன்னையொரு பேச்சு கேட்டுவிட்டு அனுப்பலாமென்று சொல்லியனுப்பினேன். என்ன சொல்கிருய் ராதா...

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே ராதாவின் இதயத்தில் ஒரே அமுதம் பாய்ந்து சந்தோஷ வெள்ளமிட்டுப் பொங்கும் உணர்ச்சியால் தன்னைமீறிய ஆனந்தத்துடன் மாதுரிதேவியின் இரண்டு கைகளையும் பிடித்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு "டாக்டர்! இப்போது நீங்கள் சொல்லும் விஷயம் சாதாரண ஒரு செய்தியாக நான் நினைக்கவில்லை. தெய்வமே உங்கள் வடிவில்வந்து என்னுடைய இந்த மிகமிக நெருக்கடியான சமயத்தில் கை கொடுத்துக் காப்பாற்றுவதாகவே நினைக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் திடீரென்று உண்டாகியுள்ள பூகம்பத்தின் ஆட்டத்தை நான் தங்களிடம் சமயம் பார்த்துச் சொல்லி என்னை எங்காவது மாற்றிவிடுங்கள். இந்த ஊரே எனக்கு வேண்டாம், என்று கேட்க நினைத்து நேரத்தை எதிர்பார்த்திருந்தேன். கடவுள்தான் அந்த எண்ணத்தை உங்கள்மூலம் பூர்த்தி செய்துவிட்டார் என்ருல் மிகையாகாது. என்னுடைய தற்போதிய சந்தோஷத்தை எப்படித் தெரிவிப்பதென்றே தெரியவில்லை. நீங்கள்தான் எனக்குக் கலிகால கடவுளாக விளங்குகிறீர்கள். நான் இன்றே கிளம்புகிறேன். என்னை உடனே அனுப்புவதாக தந்தி கொடுத்துவிடுங்கள்."

என்று ஆவேசத்துடன் கூறுவதைக் கேட்ட மாதுரி உண்மையில் வியப்புக் கடலாடினள். ஆச்சரியத்துடன் ராதாவைப் பார்த்து "ராதா! நான் நினைத்தது ஒன்று. இங்கு நடப்பது ஒன்ருக இருக்கிறதே! வெளியூர் மாற்றலை

நீ கட்டாயம் விரும்பமாட்டாய் என்று நான் திடமாக நினைத்து வந்தேன். நீ அதை இத்தனை ஆர்வத்துடன் விரும்புவதால் உடனே தந்தியடித்துவிடுகிறேன். நாளையே புறப்பட வேண்டும். தயார்தானா?" என்றாள்.

ராதா: டாக்டர்! இன்றே புறப்படுவதானாலும் நான் தயார். நீங்கள் கொஞ்சங்கூட சந்தேகப்பட வேண்டாம்... இத்தகைய பேருபகாரத்தைச் செய்துவைத்த தங்களை நான் தெய்வமாகவே வணங்குகிறேன்....

மாதுரி: உன்னுடைய அன்பின் வேகத்தில் நீ என்னை ஏதேதோ நினைத்துப் பேசுகிறாய். நான் தற்செயலாக உன்னைக் கேட்கவந்தது உனக்கு இத்தனை சந்தோஷத்தைக் கொடுத்ததானது எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. உன் சொந்தவிஷயத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கும் என்னால் ஏதாவது உதவி புரியமுடியுமானால் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன். சொல்லலாமானால் சொல்லு.

ராதா: டாக்டர்! நானே சொல்லவேண்டுமென்று எதிர்பார்த்ததாகக் கூறியதை மறந்துவிட்டீர்களா!....நான் இதுவரையில் என் கடமையில் கண்ணாகவும், முடிந்த அளவு பிறருக்கு உதவிபுரியும் புனிதத் தொண்டாற்றி காலங் கழிப்பதென்றும் தீர்மானத்தில் வாழ்க்கைப் படகை ஓட்டி வருகிறேன்.

மாதுரி: ராதா! நான் குறுக்கிடுவதை நீ மன்னிக்க வேண்டும்; அதாவது கடைசி வரையில் நீ கன்னிகையாகவே காலத்தைக் கடத்தத் தீர்மானித்துவிட்டாயா? விவாகத்தில் விருப்பமே இல்லையா? நானும் உன்போன்ற டாக்டராகையால் கேட்கிறேன்.

ராதா: தாராளமாகக் கேளுங்கள் டாக்டர்! இதனால் எனக்குக் கோபமில்லை. ஓரளவு அப்படியும் இருக்கலாமே என்ற எண்ணமும் உண்டு... ஆனால்....?

மாதுரி: ஏன் ஆனால் என்று இழுக்கிறாய். இதோ அத்தகைய மன உறுதியை உன் தாயார் கலைத்துவிடுவதாக நீ சொல்லவந்தாய். அதுதானே விஷயம்....ராதா! இதோபார், என்னுடைய சொந்த அனுபவத்தைச் சமயம் நேர்ந்திருப்பதால் நான் சொல்கிறேன். நானும் உன்னைப் போல் அப்படித்தான் பிடிவாதமாக இருந்தேன். ஆனால் இயற்கையின் சக்தியை ஜெயிக்க முடியாது என்கிற எண்ணத்தையே மறந்துவிட்டேன். என் பெற்றோர்கள் மிக மிக நல்ல உயர்ந்த பண்பாடு நிறைந்த இடங்களில் வரன் தேடியபோது நான் அவர்களிடம் சண்டையிட்டு வெறுத்துக் கடுமையாகக்கூட பேசிவிட்டேன். என் முரட்டுப்

பிடிவாதத்தைத் திருத்தமுடியாமல் என் தாயார் மறைந்து விட்டாள். பின்னும் சில வருடங்களில் என்னை மேலதிகாரிகள் சீமைப் படிப்பிற்கு உயர்தர பதவியோடு அனுப்பினார்கள். இரண்டு வருடகாலம் நான் தங்கநேர்ந்தது. அச்சமயம்தான் இயற்கையின் சக்தி என்னைப் பரீக்ஷை செய்து தன்னுடைய பலமான ஆட்சியை என்மீது செலுத்திவிட்ட வேகத்தில் என்னுடைய உறுதித் தளையை ஆசைப் புயலடித்துக் கொண்டுபோய் என்னைச் சுழற்றிச் சுழற்றிச் சோதித்து என்னுடன் படித்துவந்த ஒரு கிருஸ்துவ சிநேகிதரின் அன்புக்கு அடிமையாக்கிவிட்டது.

ராதாவின் வியப்பு கரை உடைந்த காட்டு வெள்ளம் போல் பொங்கி அறுத்துக்கொண்டு வந்தது... ஆச்சரியமே வடிவாக...."டாக்டர்! நீங்கள்"....என்றாள். அதற்குமேல் பேச்சு வாய்விட்டு வரவில்லை. அடைத்துவிட்டது. மாதுரி சிறிதும் பதற்றமின்றி பேசத் தொடங்கி..."ராதா! நீ கேட்கப்போவதை உணர்ந்தேன். நீங்கள் விவாகமானவர்களா? என்றுதானே கேட்கவந்தாய்....ராதா! கட்டாயம் விவாகமானவள்தான். ஆனல் நம் இந்தியர்களின் மிகச் சிறந்த பண்பாட்டின்படி அக்கினி சாக்ஷியாக மந்திரவித்துடன் நடக்கும் பாக்யம் பெறவில்லை. கிருஸ்துவர்களின் வழக்கப்படி....காதலின் ஆவேசத்தின் ஆட்சிப்படிக்கு ரிஜிஸ்தர் விவாகம் நடந்தது. அன்று நானிருந்த நிலையில் அதையே நான் பிறவியின் ஸார்த்தகமாகவும் வாழ்க்கையிலேயே இதைவிட வேறு பேறு கிடையாது என்றும் எண்ணிப் பூரித்தேன்....ராதா! அதே மனுஷியான நான் இன்று அதை வெறுத்துத் தள்ளுவதோடு நான் மகத்தான குற்றத்தைச் செய்துவிட்டேனே என்று விம்முகிறேன்"....

ராதா: டாக்டர்! மன்னிக்கவேண்டும்....நான் கேட்பதற்குக் கோபிக்கக் கூடாது. இப்பொழுது அவர்....

மாதுரிதேவி ஒரு சோகச் சிரிப்புச் சிரித்துப் பெருமூச்சுவிட்டாள்..."ராதா! மிகச் சிறந்த நம் பாரதநாட்டின் பெருமைக்கும் கலாச்சாரப் பண்பாட்டிற்கும் நான் மதிப்பு கொடாமல்...மனத்தை யடக்கியாளும் சக்தியற்று விட்ட அவக்கேட்டின் பயனும் இன்று நான் ஒண்டிக் கட்டைதான். அவர்களுடைய மதாச்சாரப்படிக்கு அவர் என்னை விலக்கிவிட்டுச் சுகமாயிருக்கிறார். நான் பழையபடி நம் பாரதநாடு திரும்புவதற்குள் என் பிதாவும் கண்ணை மூடிவிட்டார். நான் ஜாதிவிட்டு ஜாதி மணந்த விஷயத்தைக் காற்று மூலமாயறிந்த என் பிதா தன்னுடைய கண்ணியம் மிக்க குடும்பத்தினரின் முகத்தில் விழிக்க மனமின்றியும், என் முகத்தைப் பார்க்கவும் சகிக்காமலும் தவித்த நிலையே

அவரை விழுங்கிவிட்டது என்றால் முற்றிலும் பொருந்தும்.

அன்று என்னிதயத்தில் அலைமோதியது சிற்றின்பத்தின் வேகம், அந்த வேகத்தில் எல்லோரையுமே வெறுத்தேன். என்னை ரிஜிஸ்தர் செய்து மணந்துகொண்ட ஒரே ஒரு மனிதரின் துணையே எனக்குப் போதும் என்றும் உறுதிகொண்டேன். குறித்த தவணைக்குள் படிப்பு முடிந்ததும் தாய்நாடு திரும்பினோம்...

ராதா! அந்த ஒரு உணர்ச்சியின் வலிமையை இன்று நினைத்தாலும் என்னை ஏதோ செய்கிறது. என்னால் அந்த நாளைய சிந்தனைகளை மறக்கவே முடியவில்லை. நாங்கள் வந்ததும் நேரே என் பிறந்த வீட்டிற்கும் போகவில்லை. அவருடைய வீட்டிற்கும் போகவில்லை. எங்களைப் போன்று கலப்புமணம் செய்துகொண்டிருந்த ஒரு சிநேகிதரின் விருந்தாளியாக நாங்கள் சென்றோம். ஆனால் நாங்கள் அங்கு கண்ட காக்ஷி என்ன தெரியுமா? என்னைக் கலப்பு மணம் செய்வதற்கு முன்பே அவருக்கு விவாகமாகி இரண்டு குழந்தைகளும் இருக்கிறதாம்! அந்த இடிபோன்ற விஷயத்தை அடியோடு மறைத்துவிட்டு என்னை மாலையிட்ட மர்மத்தை நான் அறிந்ததும் தீயை மிதித்தவள்போல் துள்ளினேன்.

இத்தகைய பெரிய ரகஸ்யத்தையே என்னிடம் மறைத்து என் மானத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி என் வாழ்வையே பாழ்படுத்திவிட்ட அத்தனை கிராதகரா இவர் என்கிற ஒரு உத்வேகமான எண்ணம் என் மனத்தில் திடீரென்று புயல்போல் கிளம்பி பூகம்பத்தை உண்டாக்கிவிட்டது. உயர்தர படிப்பிற்காக வெளிநாடு சென்று புகழுடன் திரும்பும் கணவனின் வருகையையும்—பச்சிளங் குழவிகள் தன்னருமைப் பிதாவின் முகத்தைக் காண என்ன துடிதுடிக்குமோ! இவரையே பெற்றவர்கள் கூட ஒருவேளை உயிருடன் இருந்தால் அவர்கள் என்ன விதமாகத் தவிப்பார்கள். இந்த மகன் மூலம் அவர்கள் எத்தனை உயர்வுகளைக் காணக் கனவு கண்டுகொண்டிருப்பார்கள்...என்பதுபோன்ற பல பலவிதமான கேள்விகள் என் மனக்கடலில் அலை அலையாகச் சுழன்று என்னை வதைத்தன. 'பெண்புத்தி பின்புத்தி' என்கிற பழமொழி பொய்யாகவில்லை. இவருடைய வலையில் விழுவதற்கு முன்பே இவரைப் பற்றி யாருக்காவது எழுதித் தெரிந்து கொண்டேனா? இல்லை. இவர் சொல்லியது பூராவும் உண்மையானதாகவே தோன்றியது. பிறகு இதைப் பற்றி நினைத்து என்ன பலன்?

என்னுடைய ஆப்த சிநேகிதையின் மூலம் இந்தப் பயங்கரங்களை அறிந்த பிறகு பழையபடி அவரிடம் நடக்க

மனம் வரவில்லை. எனினும் ஒன்றுமே தெரியாததுபோல நடித்து இவர் என்னதான் செய்கிறார் பார்க்கலாம் என்று தோன்றியதால் நடிக்கக் கற்றுக்கொண்டேன். ஒருநாள் இரண்டுநாளென்று ஒருவாரகாலமாகி விட்டது. என் மக்கள் மனிதர்களின் முகத்தில் விழிக்க எனக்கு முகமில்லை. என் மனச்சாட்சி என்னைக் குத்திக் குத்தி வதைத்தது. என் மூத்த சகோதரனுக்கு என் சொந்த அத்தைப் பெண்ணை மணம் செய்விக்க ஆதிமுதல் ஏற்பாடாகி இருந்தும், பணத்தாசையால் என் அண்ணன் வேறு பெண்ணை மணந்த வருத்தத்தில் என் அத்தை குடும்பத்தினரின் உறவே விட்டுப் போய்விட்டதோடு, அந்தப் பெண் இவனையே மணக்க ஆசைப்பட்டிருந்தது நிறைவேறாததால் தான் வேறு யாரையும் மணந்துகொள்ளாது தன் வாழ்வை சன்யாசினியாகக் கழித்துவருகிறாள். அந்த விஷயமும் என் கண்முன் காக்ஷியளித்து என்னை உருகச் செய்தது.

ராதா!...உன்னுடைய பொன்னான நேரத்தை நான் வீணாக்குகிறேன். இந்தப் பழங் குப்பைகள் உனக்கு எதற்கு என்று நீ நினைக்கலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. என் சரித்திரத்தின் மூலம் நான் கற்றுக்கொண்ட பாடம் என்ன என்பதை என்போன்ற சகோதரிகளுக்கும் கூறி அவர்களைத் திருத்துவதற்காகவே சொல்லுகிறேன். நீ விவாகம் செய்துகொள்ளாமல் சத்யமான த்யாக உறுதியுடன் இருக்கமுடியும் என்கிற திடசித்தம் உண்டானால் ஒருவேளை ஜெயிக்கலாம். இல்லையேல் கல்யாணத்தைச் சரியான முறையில் தக்க இடத்தில் நடத்திக்கொள். நம் பாரத நாட்டின் மிகச் சிறந்த பண்பாட்டின்படி செய்துகொள். வீணாகப் பாழாக்கிவிடாதே... என்பதற்காக...

ராதா: டாக்டர்! உண்மையில் உங்கள் விஷயத்தைக் கேட்பதுபோலல்லாமல் கதைகேட்பதுபோன்ற உணர்ச்சியுடன் கேட்கிறேன். அதன் முடிவைக் கூறிவிடுங்கள். அவர் ஏன் உங்களை விட்டுவிட்டார்....

மாது: ராதா! அந்த முடிவை நீ அறியத்தான் வேண்டுமா? உம்....அறிந்தால்தான் உன் மனம் நிம்மதியடையும். அவர் தனது ரகஸியத்தை எத்தனை மூடி மறைத்தும் அது கரையை உடைத்துக்கொண்டு வெளியே வந்து என்னையே மோதவிட்டது. எப்படி தெரியுமா? அவர் மனைவியும் பெற்ற தாயும் அவருடைய 5 வயது மகன், மூன்று வயது மகள் ஆகிய நான்கு பிம்பங்களும் என்னை நேரில் தேடிக் கொண்டு வந்து தங்கள் துக்கங்களை முறையிட்டன...குழந்தைகளுக்கு ப்ரலாபிக்கத் தெரியவில்லை என்றாலும் அப்பா எங்கே? என்று கேட்டபோது என்னிதயமே வெடித்து

விட்டது போலாகியது. தவிர அவருடைய தாயாரும் மனைவியும் முதல் முதல் என்னிடம் கேட்ட கேள்வி என்ன தெரியுமா? உங்கள் புகழ்பெற்ற இந்து தர்மத்தில் இப்படித்தான் செய்யும்படி சொல்லியிருக்கிறதா?.. என்று ஏதேதோ ஆரம்பித்துக் கேட்கும்போது என்னுயிர் அப்படியே போய்விடக் கூடாதா என்று பதறித் தவித்தேன்.

அடுத்த நிமிஷமே நான் என்ன செய்தேன் தெரியுமா? நம் இந்து தர்மத்தின் புகழை இழிவு படுத்திப் பேசும் சுடு சொற்களைத்தாங்காமல்'தாயே!நான்செய்தது மிகத் தவறு தான். ஆனால் அதற்கு நானே முற்றிலும் பொறுப்பாளியல்ல. அவருக்கு மக்கள் மனிதரே இல்லை. எல்லோரும் இறந்துவிட்டார்கள். விவாகமே இன்னும் ஆகவில்லை. என்று கூறியதால் நான் அதை நம்பிப் பாழுங் கிணற்றில் விழுந்துவிட்டேன். என்னுடைய மதத்திற்கும் நாட்டிற்கும் இழுக்குத்தேடியபாபத்தை நான் உணர்கிறேன். நான் இந்த நிமிடத்தோடு விட்டுவிட்டேன். உங்கள் மகனை நீங்கள் அடையுங்கள். உங்கள் பர்த்தாவுடன் நீங்கள் களித்து வாழுங்கள்...

என்று ஆவேசம் வந்தவள்போல் கூறிவிட்டு, முறியல் சீட்டும் எழுதிவிட்டு மறைந்துவிட்டேன். எங்கு சென்றேன். எப்படி வாழ்ந்தேன் என்பதைப் பிறருக்கு அறிவிக்கமுடியாதபடி ரங்கோன்கப்பலேறிச் சென்று சுமார் 15 வருடகாலம் அங்கு ஸேவை செய்தேன். நிம்மதியாய் த்யாக புத்தியுடன் சன்யாசினியாய் அன்று முதல் இன்றுவரையில் வாழ்ந்து வருகிறேன். இடையில் உண்டாகிய யுத்தப் புயலில் நான் தாய்நாடு திரும்பும் கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. அங்கு நல்ல புகழும் பணமும் சம்பாதித்துக்கொண்டு சிறப்புடன் வந்து சேர்ந்தேன். மிஷன ஆஸ்பத்திரியில் சில வருடங்கள் இருந்தேன். இப்போது 5 வருட காலமாக இங்கு இருக்கிறேன்... இதோடு என் சரித்திரம் முடிந்து விட்டது. ராதா! விவாகம் செய்து கொள்ளாமல் மட்டும் நீ அசட்டு தைரியமாக இருந்து விடாதே. நான் சமயம் கிடைக்கும்போது உனக்குச் சொல்ல நினைத்தேன். இப்போது அது சரியாகிவிட்டது... ஆமாம்! நீ எதற்காக திடீரென்று மாற்றிக்கொண்டு போக விரும்புகிறாய்? என்ன கஷ்டம் உனக்கு நேர்ந்திருக்கிறது. என்று தன் சரிதையை முடித்துவிட்டு வெகு சாவதானமாகக் கேட்டாள்.

183290

ராதாபாயும் தன் அந்தரங்கத்தை உரைக்க எடுத்தும் ஏனோ நெஞ்சை அடைத்து மௌனியானாள்.

படத்தில், பலியும் விஷ்ணுவும் சந்திக்கும் காட்சி தீட்டப்பட்டுள்ள வர்ண ஓவியத்தைக் காணலாம். இது, 16-வது நூற்றாண்டைச் சேர்ந்த மிக உன்னதமான ஆறு வர்ண ஓவியங்களில் ஒன்றாகும்; ஹரி வம்ச புராணத்தின் பாரசீக மொழிபெயர்ப்புப் பிரதியில் உள்ள சித்திரம் அது.



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

# அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

**ரூ. 4.**
சாந்தியின் சிகரம்

**ரூ. 3.**
வைதேகி (2 பாகம்)
நிர்மலநீரோடை

**ரூ. 2-50**
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

**ரூ. 2.**
அனாதைப்பெண்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
…நாஞ்சலி
புனிதபவனம்
குணக்குன்று
ஜீவநாடி
அப்பழியும் ராஜாராம் [முதல் பாகம்]

**ரூ. 1-75**
கலாநிலயம்
சிலாசாஸனம்
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

**ரூ. 1-50**
பவித்திரப்புதுமை
ஓவியப் பரிசு
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

**ரூ. 1-25**
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

**ரூ. 1-13**
அபராதி

**ரூ. 1.**
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

**நயாபைசா 75**
பத்மமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

**நயாபைசா 50**
உருக்க இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
ராஜ்யலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

| | |
|---|---|
| தீபஸ்தம்பம் | 4-0 |
| உதய சூர்யன் | 1-25 |
| பெண்மணிக்கனல் | 1-0 |
| இருளில் ஒளி | 1-25 |
| தியாகபலி | 0-75 |
| ஜயந்திசிந்தனைகள் | 1-50 |
| கோதாஹ்ருதயம் | 0-75 |
| ஸ்ரீஸ்துதி | 0-25 |

## வை.மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம் ரூ. 1-50
பாலர் மோகினி 12 சிறு கதைகள் 1-0

## சுத்தானந்த பாரதி

காந்தி கீர்த்தனம் 3-50

## ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமவுரை 1-0

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.